# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் செவ்வாய்கிழமை நாள் 30.09.2025 காலை 10.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1** **31.07.2025 அன்று நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் விவாதித்து தீர்மானிக்க முடிவு செய்யப்பட்ட பொருள் : 51**

**குடிநீர் உப விதிகள்**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 1999) பிரிவு 199 (1)ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஒப்புதலுடன் பின்வருமாறு குடிநீர் இணைப்புகளுக்கான கட்டண விகிதங்களையும், துணை விதிகளையும், இதன்மூலம் உருவாக்கப்படுகிறது.

1. i. மாநகராட்சியால் சொத்து வரி விதிக்கப்பட்ட வீடுகள் / கட்டிடங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

   ii. குடிநீர் இணைப்பு பெறுவதற்கு, கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், உரிமையாளரின் ஒப்புதலுடன், இணைப்பில் உள்ள "படிவம் 1" ஐ பூர்த்தி செய்து ரூ.100/– செலுத்தி, சொத்து வரி செலுத்திய ரசீது ஆகிய விவரங்களுடன் இணைத்து ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

   iii. நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, விண்ணப்பத்தை நேராய்வு செய்து, அட்டவணை–1 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அடித்தளப் பகுதியைப் (Plinth area) பொறுத்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் (10 தவணைகளுக்கு மிகாமல்) வைப்பு தொகையுடன், ஆய்வு கட்டணம், சாலை மறுசீரமைப்பு கட்டணம் மற்றும் சென்டேஜ் கட்டணம் ஆகியவற்றை செலுத்துமாறு கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவருக்கு அறிவுறுத்த வேண்டும்.

   iv. அதன் பிறகு, ஆணையர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான உத்தரவை படிவம்–2 ல் பிறப்பிப்பார். விண்ணப்பப் பதிவு தேதியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மூப்பு வரிசையின்படி, கட்டிடத்தின் உரிமையாளர் /குடியிருப்பவர், மாநகராட்சியால் அங்கீகாரம் பெற்ற பிளம்பர் / ஒப்பந்ததாரர்கள் மூலமாக மாநகராட்சி அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ், குடிநீர் இணைப்பு பெற்று கொள்ள வேண்டும்.

2. i. எந்தவொரு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ், புதிதாக குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று, "படிவம் 1"ல் கண்டுள்ள கட்டண விகிதங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும். (பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.) "படிவம் 1" உடன் சொத்து வரி செலுத்திய ரசீது ஆகிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு ஆணையர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி குடிநீர் சேவை இணைப்பை வழங்க படிவம் 2ல் உத்தரவை வழங்க வேண்டும்.

ii. மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாநகராட்சி / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற அரசு சார்பு நிறுவனங்கள் மூலம் அமர்த்தப்படும் ஒப்பந்ததாரர் கொண்டு, நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதல் பெற்ற பின் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

iii. நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின், அறிவுறுத்தலின் பேரில், அடித்தளப் பகுதியைப் (Plinth area) அடிப்படையாக கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள, அட்டவணை–1 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைப்பு தொகையினை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் (10 தவணைகளுக்கு மிகாமல்) செலுத்துமாறு கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவருக்கு அறிவுறுத்த வேண்டும். நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சொத்து வரி விதிக்கப்பட்ட அனைத்து இனங்களுக்கும் (வீட்டு உபயோகம் / குடியிருப்பு அல்லாத உபயோகம்) விடுபடாமல் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

3. குடிநீர் உபவிதிகளின் படி, அனுமதிக்கப்பட்ட தொகை செலுத்தியும், தேவையான ஆவணங்கள் இணைத்து பெறப்படும், விண்ணப்ப படிவங்களில் (படிவம்–1) மனு செய்தால் மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்க பரிசீலனை செய்யப்படும்.

4. மாநகராட்சி மூலம் அடித்தளப் பகுதியைப் (Plinth area) அடிப்படையாக கொண்டு தயார் செய்யப்பட்டுள்ள, அட்டவணை–2 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீட்டு உபயோகம் / குடியிருப்பு அல்லாத உபயோக குடிநீர் இணைப்பிற்கு குடிநீர் கட்டணங்கள் வசூலிக்கப்படும். வரையறுக்கப்பட்ட கட்டணம் (fixed flat rate) / நுகரப்படும் குடிநீரின் அளவின் (meter rate) அடிப்படையில் கேட்பு நிர்ணயம் செய்யப்படும். நுகரப்படும் அளவு குறைவாக இருப்பின், அதனை பொருட்படுத்தாமல் குறைந்தபட்ச வரையறுக்கப்பட்ட (fixed flat rate) கட்டணத்திற்கு உட்பட்டு குடிநீர் கேட்பு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.

5. i. சொத்து வரிவிதிப்பினை பொறுத்து, (குடியிருப்பு / குடியிருப்பு அல்லாத பயன்பாடு) என நேராய்வு செய்து, மாநகராட்சியால் வீட்டு உபயோகம் / குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு என குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு, கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

ii. மாநகராட்சியால், வீட்டு உபயோக பயனுக்காக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு , கீழ்க்கண்ட கட்டமைப்புகளாக பயன்படுத்தப்பட்டுவரின், **குடியிருப்பு அல்லாத இனங்களாகவே கருதப்பட்டு** கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

அ) உற்பத்தி நிறுவனங்கள் , வணிக நிறுவனங்கள் , தோட்டம், கட்டுமான கட்டமைப்புகள் , நீரூற்று, நீச்சல் குளங்கள், சொகுசு பங்களா, இயந்திர பயன்பாடு, கால்நடை விற்பனை சந்தை , நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் , தனியார் மருத்துவமனைகள் , தனியார் கால்நடை மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள் , பொழுது போக்கு கூடும் இடங்கள் , ஹோட்டல், திரையரங்குகள் மற்றும் இதர வணிக தளங்களுக்கான குடிநீர் இணைப்பு.

ஆ) இரயில்வே துறை , இராணுவம், சிறைத்துறை, காவல்துறை, ஏர்போர்ட், மருத்துவ கல்லூரி மற்றும் பிற அரசு மற்றும் தனியார் பாதுகாப்பு நிறுவனங் களுக்கு சொந்தமான /குத்தகை மற்றும் வாடகை கட்டிங்களுக்கு , வியாபாரம் மற்றும் வர்த்தகம் நடைபெறும் கட்டிடங்களுக்கு, குடியிருப்பு அல்லாத இனங்களாக கருதப்பட வேண்டும்.

இ) வியாபார மற்றும் வர்த்தக நிறுவனங்களான உணவு விடுதிகள் , உணவகம், தேநீர்/காபி கடை, திரையரங்கு, திருமண மண்டபம் , மினிஹால் மற்றும் இதர வியாபார மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு **குடியிருப்பு அல்லாத இனங்களின்** கீழ் (Commercial Connections) கொண்டு வரப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

iii. தொழிற்சாலை சட்டம், 1948ன் கீழ் அனுமதி பெற்று தொழில் / செயல்பட்டு வரும் சோடா பேக்டரி, ஆவின், ஐஸ் பேக்டரி, அரிசி ஆலைகள், மற்றும் சிறு குறு நிறுவனங்கள், குடிசை தொழில் மற்றும் இதர நிறுவனங்களுக்கு **தொழிற்சாலைகளுக்கான இனங்களின் கீழ் குடிநீர் இணைப்பு** வழங்கப்படும்.

அ) மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களும், மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலும், பராமரிப்பிலும் உள்ள கட்டிடங்கள், அதன் வாடகைதாரர் / குத்தகைதாரரது பயன்பாட்டினை பொறுத்து குடியிருப்பு / குடியிருப்பு அல்லாத பயன்பாடு என வகைப்படுத்தி குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

ஆ) குடியிருப்பு அல்லாத பயனுக்கு வழங்கப்படும் இதர இணைப்புகளுக்கு குடியிருப்பு அல்லாத இனத்தின் கீழ் இணைப்பு வழங்கப்படும்.

6 i. வீட்டு உபயோக குடிநீர் இணைப்பில், இரண்டு கணக்கீட்டு காலகட்டங்களில், தொடர்ச்சியாக அடிப்படை விநியோக அளவை விட இரண்டு மடங்கு **அதிகமான குடிநீர் நுகர்வு** செய்வது கண்டறியப்பட்டால், அட்டவணை–2இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடியிருப்பு அல்லாத உபயோக விகிதங்களின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.

ii. குடிநீர் இணைப்பு பெறப்பட்டுள்ள கட்டிடம் இடிக்கப்பட்டால், குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும்.

iii. குடிநீர் இணைப்பு, குடியிருப்பு பயனுக்காக வழங்கப்பட்டு, அது புதிய கட்டுமானம் அல்லது வீட்டு கட்டுமான பராமரிப்பு பயனுக்கு உபயோகிக்கப்பட்டால், அது குடியிருப்பு அல்லாத இனங்களின் கீழ் சேர்க்கப்பட்டு, அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படும்.

iv. புதிய கட்டுமானம் அல்லது வீட்டு கட்டுமான பராமரிப்பு பணிகள் முடிவு பெற்ற பின், குடிநீர் இணைப்புகளுக்கு சொந்தக்காரர் வீட்டு உபயோக குடிநீர் இணைப்பிற்கு மீண்டும் மாற்ற மாநகராட்சி ஆணையருக்கு எழுத்து மூலம் மனு செய்ய வேண்டும். நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆய்வு செய்தபின், கூடுதல் கட்டணம் மற்றும் அபராதக் கட்டணம் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். கட்டுமான பணிகள் முடிவுற்றதை நகரப் பொறியாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆய்வு செய்தபின் வீட்டு உபயோக குடிநீர் இணைப்பிற்கு மாற்றி உத்தரவு வழங்க வேண்டும்.

7. 1. சொத்து வரியின் கீழ் மதிப்பிடப்படும் ஒவ்வொரு குடியிருப்பிற்கும், ஒரு குடிநீர் இணைப்பு வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பைக் கட்டுப்படுத்த நீர்வரத்து கட்டுப்பாட்டுமானி (Flow Control Valve) மற்றும் அடைப்பான் (gate valve) பொருத்தப்படும். குடியிருப்பிற்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பில் இருந்து தங்களது பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும், குடிநீர் இணைப்பு இல்லாத பிற குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குதல் கூடாது.

2. **அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு** குடிநீர் வழங்கப்படும் நடைமுறை:

அ) 2 அல்லது 3க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கும் பொழுது, (சொத்து வரி மதிப்பீட்டு எண்ணிக்கையில்) தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு குடியிருப்பிற்கும், தனித்தனியாக வைப்பு தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

ஆ) காலனி / அடுக்குமாடி / பன்மாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பொழுது, பல சொத்துவரி மதிப்பீடுகள் இருந்தாலும், மொத்த குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, நகரப்பொறியாளரால் அட்டவணையில் கண்டுள்ளவாறு குடிநீர் விநியோக குழாயின் அளவு, திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் வடிவமைக்கப்பட்டு, ஆணையர் அவர்களது ஒப்புதல் பெற்று, குடிநீர் இணைப்புகள் வழங்க முடிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பிற்கும் தனித்தனி குடிநீர் இணைப்பு வழங்கப்பட கூடாது.

இ) ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள குடியிருப்புகளுக்குரிய சொத்து வரி மதிப்பீட்டினை தனித்தனி அலகுகளாக கருதி, வைப்பு தொகை வசூலிக்கப்பட வேண்டும். அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு குழாயின் விட்டம், வழங்கப்படும் குடிநீரின் அளவு மற்றும் அங்குள்ள தண்ணீரின் அழுத்தம் மற்றும் சாத்திய கூறுகள் வைத்து நகரப் பொறியாளரால் குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை பரிந்துரைக்கப்பட வேண்டும். **வீட்டு உபயோகம் முறையில், அளவுமானி பொருத்தப்பட்டு, குடிநீர் கேட்பு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.**

| வ. எண். | அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை | குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | வைப்பு தொகை | குழாயின் அளவு |
|---|---|---|---|---|
| 1. | நான்கு குடியிருப்பு வரை | 1 இணைப்பு | ஒவ்வொரு குடியிருப்பிற்கு வீட்டு உபயோக முறையில் வைப்பு தொகை செலுத்தப்பட வேண்டும். அட்டவணை–(1) ல் உள்ளவாறு | 20மி.மீ பயன்தரும் குழாய் 15 மி.மீ திருகு குறுங்குழாய் (நகரப் பொறியாளரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.) |
| 2. | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 2 இணைப்பு | | |
| 3. | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 3 இணைப்பு | | |
| 4. | 12 குடியிருப்புகளுக்கு மேல் | 4 வீடுகளுக்கு 1 இணைப்பு | | |

8. 1. **வழிப்பாட்டு தலங்களுக்கு வழங்கப்படும் குடிநீர்** இணைப்பு வழிபாட்டு தலங்களுக்கு (கோயில்கள், மசூதிகள், தேவாலயம், பேராலயம், போன்றவை)வரும் பொதுமக்களுக்கு குடிப்பதற்கு மட்டும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.

அ) வழிப்பாட்டு தலங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு, வீட்டு உபயோக முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கான நடைமுறை விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆ) வழிப்பாட்டு தல நிர்வாகத்தினர், குடிநீர் இணைப்பு பெறுவதற்கு / பராமரிப்பதற்கு / துண்டிப்பதற்கு தேவையான அனைத்து சாமான்கள் / பொருட்களை தன் சொந்த பொறுப்பிலேயே வாங்கி மாநகராட்சி அனுமதியுடன் இணைப்பு அமைத்து கொள்ள வேண்டும். குடிநீர் இணைப்புகள் 15 மிமி விட்டமுள்ளவையாகவும், தானியிங்கி மூடுகுழாய் பொருத்தப்பட்டு, குடிநீர் வீணாக செல்வதை தடுக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

இ) குடிநீர் குடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் குடிநீர் கட்டணங்கள் வீட்டு உபயோக முறையில் வசூலிக்கப்பட வேண்டும்.

ஈ) வழிப்பாட்டு தல நிர்வாகத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் வணிக / வர்த்தக மற்றும் வியாபார கட்டிடங்களுக்கு பெறப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு, குடியிருப்பு அல்லாத உபயோக முறையில் வைப்பு தொகை மற்றும் கட்டணங்கள் பெறப்பட்ட பின்னர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

9 1. **அரசு கல்வி நிறுவனங்கள் / அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகள்**

அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வரும் கட்டிடங்களுக்கு, சொத்து வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், இக்கட்டிடங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு வீட்டு உபயோக முறையில் குடிநீர் இணைப்புகள் வழங்கி, உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

2. **அரசு கட்டிடங்கள் மற்றும் பொது துறை நிறுவனங்கள்**

அ) இக்கட்டிடங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு, வரிவிதிப்பு உறுதி செய்து, வீட்டு உபயோகம் அல்லாத முறையில் குடிநீர் இணைப்புகள் வழங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஆ) **அங்கன்வாடி மற்றும் மாநகராட்சி பள்ளி கட்டிடங்களுக்கு** குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இக்கட்டிடங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணங்கள் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்படுகிறது.

பல சொத்துவரி வரிவிதிப்புகள் இருந்தாலும், மொத்த குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, நகரப்பொறியாளரால் குடிநீர் விநியோக குழாயின் அளவு, திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் ஆகியவை பரிந்துரைக்கப்பட வேண்டும். ஒரே வளாகத்தில் உள்ள பல்வேறு கட்டிடத்திற்கு **தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட கூடாது**. குடிநீர் தேவை, அங்கு உள்ள மாணவர்கள் மற்றும் அலுவலர்களை கணக்கில் கொண்டு, குடிநீர் குழாயின் அளவு, திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் ஆகியவை நகரப்பொறியாளரால் பரிந்துரைக்கப்பட வேண்டும். ஆணையர் அவர்களது ஒப்புதல் பெற்ற பின்னரே, குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டும்.

10. அ) வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளுக்கு 1 நிமிடத்திற்கு 5 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில், திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules or flow control valve) பொருத்தப்பட வேண்டும். குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு தேவையான உபபொருட்களான அடைப்பான்கள், வால்வுகள், மீட்டர்கள் குடிநீர் குழாயின் நீளம் உட்பட நகரப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி நிர்ணயம் செய்யப்படும்.

1) 15 மி.மீ. குழாய் இணைப்பு 10 மி.மீ. திருகு குறுங்குழாய்
2) 20 மி.மீ. குழாய் இணைப்பு 15மி.மீ. திருகு குறுங்குழாய்

இதில் எவை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதை நகரப்பொறியாளர் முடிவு செய்யலாம். இணைப்புகள் வழங்க தேவையான பொருட்கள், திருகு குறுங்குழாய் (Flow Control Valve) மற்றும் அளவுமானிகள், சோதனை செய்து இந்திய தர நிர்ணய சான்றிதழ் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும். (IS codes and standards)

ஆ) குடிநீர் குழாயானது, சாக்கடைகள், பாதாள சாக்கடை, சிறுபாலம் வழியாக வழங்கப்பட வேண்டுமாயின், குடிநீர் மாசுபாடு அடைய / குழாய் பழுதடைய வாய்ப்புள்ளதாக நகரப்பொறியாளர் கருதினால், குடிநீர் இணைப்பினை பாதுகாக்க இரும்பு உறைக்குழாய்களை பயன்படுத்த அறிவுறுத்த வேண்டும்.

11. 90 மீட்டர் அதிகமான தூரமுள்ள குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு செயற்பொறியாளர் நிலைக்கு குறையாத நகரப் பொறியாளரால் அல்லது மண்டல செயற் பொறியாளரால் தொழில்நுட்ப சாத்திய கூறுகளை ஆய்வு செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்ட பின்பு, குடிநீர் உபவிதிகளை பின்பற்றி, குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும். குடிநீர் இணைப்பு வழங்க தொழில்நுட்ப சாத்தியகூறு இல்லை எனக் கருதினால், அப்பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாயினை பொதுசாலையில் அமையுமாறு, நீட்டிப்பு செய்து CPHEEO கையேட்டின்படி குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

12. அ) குடியிருப்புகளுக்குக் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு பொருத்தப்படும் பொருத்திகள், இணைப்புகள், அளவுமானி, குழாய்கள் ஆகியவை மாநகராட்சி அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளை அதிகாரிகள் பார்வையிட / ஆய்வு செய்ய வசதிகள் செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிடத் தடை ஏற்படுத்தினால், அக்குடிநீர் குழாய் இணைப்பினை துண்டிப்பு செய்யப்படும்.

ஆ) குடிநீர் இணைப்புகளை வழங்கும்போது, அனைத்து உபகரணங்களும் கட்டிட வளாகத்திற்குள், நுழைவாயில் அருகில், ஒரு தெளிவான பகுதியில் பொருத்தப்படுதல் வேண்டும். அங்கிருந்து கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர், தங்கள் சேகரிப்பு தொட்டியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள நிலத்தடி / தரை மட்ட / மேல்நிலை தொட்டிகளில் தண்ணீரைப் பெற வேண்டும்.

இ) குடிநீர் இணைப்பில் நேரடியாக குடிநீரை உறிஞ்சுவதற்கு எந்த வகையான மின் மோட்டார்கள் அல்லது விசை பம்புகளை பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு கண்டறியப்பட்டால், குடிநீர் விநியோக இணைப்புகள் உடனடியாக துண்டிக்கப்படும். மேற்கூறிய இணைப்பில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட மின்மோட்டரோ விசை பம்பு மற்றும் ஏனைய கருவிகள் யாதும் திருப்பி தரப்படமாட்டாது. இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகளை வைத்து குடிநீர் உறிஞ்சுவது கண்டறியப்பட்டால், கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஈ) கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பில் நேரடியாக குடிநீரை உறிஞ்சுவது கண்டறியப்பட்டு, துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை மீண்டும் பெறுவதற்கு, மீண்டும் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகளை பொருத்தி குடிநீரை உறிஞ்ச மாட்டேன் என்ற உறுதிமொழியுடன், அபராத தொகை ரூ.10,000/-ம், துண்டிப்பு கட்டணம், மறு இணைப்பு கட்டணம், சாலை மறுசீரமைப்பு கட்டணம் (துணை விதி 16(4)ல் கண்டுள்ளவாறு) மற்றும் மேற்படி இணைப்புக்குரிய குடிநீர் கட்டணத்தில் 3 வருட தீர்வை (ஆறு அரையாண்டுகள்) கூடுதல் தண்டத் தொகையாக செலுத்த வேண்டும்.

13 அ) குடிநீர் இணைப்பிற்கு கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவரால் பொருத்தப்படும் அளவுமானிகள், நகரப்பொறியாளர் / அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் அனுமதிக்கப்பட வேண்டும். அளவுமானிகள் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு, சுற்றுச்சுவரில் அல்லது கட்டிட வளாகத்திற்குள் தரையில் வைத்து பூட்டப்பட்டு அல்லது சீல் வைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட வேண்டும். பெறப்படும் குடிநீரின் அளவு, அளவுமானி மூலமாக காலமுறையில் கணக்கிடப்பட்டு, நடப்பில் உள்ள கட்டணங்களின்படி கணக்கிடப்பட்டு, நுகர்வோரிடமிருந்து பெறப்படும்.

ஆ) கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவரால் அளவுமானி முறையாக வாங்கி, நிறுவி, பராமரிக்கப்பட வேண்டும்.

இ) பொருத்தப்பட்டுள்ள அளவுமானி சேதமடைந்தால், அதை உடனடியாக கட்டிட உரிமையாளர்/ குடியிருப்பவர் தங்கள் சொந்த செலவில் நகரப் பொறியாளர் அல்லது அவரால் அதிகாரம் பெற்ற அலுவலரின் மேற்பார்வையின் கீழ் பழுதுபார்த்து / மாற்ற வேண்டும். குறைபாடுள்ள அளவுமானிகளை மாற்றத் தவறினால் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

14 1. பெறப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வைப்புத் தொகை மற்றும் நுகர்வு கட்டணங்களை கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர்கள் செலுத்த வேண்டும்:

**அட்டவணை–1:**
**குடிநீர் இணைப்புகளுக்கு பெறப்படும் வைப்பு தொகை (01.04.2025 முதல்)**

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் (சதுர அடியில்) | வைப்பு தொகை (1 இணைப்பிற்கு / தொகை ரூ.) | | | |
|---|---|---|---|---|
| | வீட்டு இணைப்புகள் | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகள் | தொழிற்சாலைகள் | கல்வி நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் / அரசு அலுவலகங்கள் / மற்றவை |
| **மாநகராட்சி** | | | | |
| <=600 | 7500 | 15000 | 15000 | 15000 |
| 601-1200 | 10000 | 20000 | 20000 | 20000 |
| 1201-1800 | 12500 | 25000 | 25000 | 25000 |
| *1801 | *15000 | *30000 | *30000 | *30000 |

*1801 சதுர அடிக்கு மேல் உள்ள சொத்து வரி அடிப்படையில் (Plinth) பகுதி அதிகரிப்புக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்.

**அட்டவணை–2:**
**குடிநீர் இணைப்புகளுக்கு பெறப்படும் நுகர்வு கட்டண தொகை (01.04.2025 முதல்)**

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் (சதுர அடியில்) | குடிநீர் கட்டண தொகை (1 இணைப்பிற்கு / தொகை ரூ./1 மாதத்திற்கு) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Upto 16KL in all Corporations | | | | for every additional KL | | | |
| | வீட்டு இணைப்புகள் | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகள் | தொழிற்சாலைகள் | கல்வி நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் / அரசு அலுவலகங்கள் / மற்றவை | வீட்டு இணைப்புகள் | வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகள் | தொழிற்சாலைகள் | கல்வி நிறுவனங்கள் / தொழிற்சாலைகள் / அரசு அலுவலகங்கள் / மற்றவை |
| **மாநகராட்சி** | | | | | | | | |
| <=600 | 180 | 540 | 540 | 540 | 27 | 81 | 81 | 81 |
| 601-1200 | 200 | 600 | 600 | 600 | 30 | 90 | 90 | 90 |
| 1201-1800 | 270 | 810 | 810 | 810 | 40 | 120 | 120 | 120 |
| *1801 | *360 | *1080 | *1080 | *1080 | *54 | *162 | *162 | *162 |

*1801 சதுர அடிக்கு மேல் உள்ள சொத்து வரி அடிப்படையில் (Plinth) பகுதி அதிகரிப்புக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்.

2. மாநகராட்சியில் குடிநீர் வழங்கல் அமைப்பு பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்பு தொகைகளை ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 10% குறையாமல் உயர்த்தி வசூலிக்கப்படும்.

3. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளுக்கு செலுத்தப்பட்டுள்ள வைப்பு தொகைக்கும், தற்போது உயர்த்தப்படும் வைப்பு தொகைகளில், ஏற்படும் வித்தியாச தொகையினை கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவரால் செலுத்தப்பட வேண்டும்.

15. **1. லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர்**

மாநகராட்சி அல்லது தனியார் லாரிகள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீருக்கு, கொள்ளளவு மற்றும் பயண தூரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாநகராட்சி மூலம் குடிநீர் கட்டணங்கள் நிர்ணயம் செய்ய வேண்டும்.

மாமன்ற ஒப்புதல் பெற்று மாநகராட்சி லாரி மூலம் வழங்கப்படும் குடிநீருக்கு கட்டணங்களை நிர்ணயம் செய்யலாம். அவசர காலம் / குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் லாரி மூலம் குடிநீர் வழங்குவது குறித்து ஆணையரால் தீர்மானிக்கப்படும்.

**லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீருக்கு பெறப்படும் கட்டண விபரம் (10000 லிட்டர்)**

| குடிநீர் வழங்குவதற்கான எல்லை விபரம் | மாநகராட்சி லாரிகள் மூலம் வழங்க (நடை ஒன்றுக்கு) | தனியார் லாரி மூலம் குடிநீர் மட்டும் பிடித்து கொள்ள (நடை ஒன்றுக்கு) |
|---|---|---|
| மாநகராட்சி எல்லைக்குள் (5 கி.மீட்டருக்குள்) | ரூ.2,000/- | ரூ.1,000/- |
| மாநகராட்சி எல்லைக்குள் (5 கி.மீட்டருக்கு மேல்) | ரூ.3,000/- | |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பால் (மாநகராட்சி எல்லையிலிருந்து 10 கி.மீ தூரத்திற்கு மட்டும்) | ரூ.4,000/- | |

2. **தற்காலிக குடிநீர் இணைப்புகள்**

பொதுமக்கள் கூடும் இடங்களான பொருட்காட்சி, சர்க்கஸ், மதம் சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்கள், போன்ற இடங்களுக்கு நகரப்பொறியாளரது பரிந்துரையின் பேரில், தற்காலிக குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்காணும் இடங்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இணைப்பு வழங்கப்படும்.

அ. ஒரு இணைப்பிற்கு ஒரு மாதத்திற்கு 10 KL வரை நுகரப்படும் குடிநீருக்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ.1500/-ம், 10 KLக்கு மேல் நுகரப்படும் குடிநீருக்கு ஒவ்வொரு KLக்கு ரூ.50/- வீதம் வசூலிக்க வேண்டும்.

ஆ. அனைத்து தற்காலிக குடிநீர் இணைப்புகளும், வீட்டு உபயோகமற்ற இணைப்புகளாக கருதப்படும்.

இ. தற்காலிக குடிநீர் இணைப்புகள் 90 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

16. 1. அளவுமானி முறையிலான கட்டணம் (Meter rate) / நிலையான கட்டணம் (Flat rate) அடிப்படையில் எழுப்பப்படும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்டணங்களை செலுத்தத் தவறினால், ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது ஒரு மாதத்திற்கு குறைவான காலத்திற்கு பிறகு செலுத்தப்படும் கட்டணங்களுக்கு, ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்படும்.

2. கட்டணம் செலுத்தாததால் ஏற்படும் எந்தவொரு இழப்பிற்கும், அதைத் தொடர்ந்து குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும், கட்டிடங்களின் உரிமையாளர்/குடியிருப்பவர் அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும்.

3. குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும், சொத்து வரி வசூல் செய்யும் நடைமுறையே பின்பற்றி கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

4. கட்டிடங்களின் உரிமையாளர்/குடியிருப்பவர் மீண்டும் குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பிக்கும் போது, துண்டிப்பு கட்டணமாக ரூ.500/-ம், மறுஇணைப்பு கட்டணமாக ரூ.500/-ம், மற்றும் அதற்கு தேவையான சாலை பழுதுபார்ப்பு / மறுசீரமைப்பு கட்டணங்களுடன் சேர்த்து பின்வரும் நிபந்தனைகளுடன் இணைப்பு வழங்கப்படும்.

அ. மாமன்றத்தால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் துண்டிப்பு கட்டணம் மற்றும் மறு இணைப்புக்கான கட்டணங்கள் கட்டிடத்தின் உரிமையாளர்/குடியிருப்பவரால் செலுத்தப்பட வேண்டும்.

ஆ. சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணங்கள் நிலுவையின்றி கட்டிடத்தின் உரிமையாளர்/குடியிருப்பவரால் செலுத்தப்பட வேண்டும்.

17. 1. குடிநீர் பயன்படுத்தப்படாவிட்டாலும், எவ்வித தள்ளுபடியும் இல்லாமல், குறைந்தபட்ச கட்டணம் வசூலிக்கப்படும். அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால், கட்டிடங்களின் உரிமையாளர்/குடியிருப்பவர் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாகத் தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிப்பு செய்து கொள்ளலாம். இந்த காலத்திற்கு குடிநீர் கட்டணங்கள் விதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு துண்டிக்கப்படும் போது, துண்டிப்புக் கட்டணம் ரூ.500/–ம் மறு இணைப்பு கோரும் போது, மறுஇணைப்புக் கட்டணமாக ரூ.500/– உடன் தேவையான சாலை பழுதுபார்ப்பு / மறுசீரமைப்பு கட்டணங்களுடன் சேர்த்து, வசூல் செய்யப்படும்.

2. கட்டிடங்களின் உரிமையாளர்/குடியிருப்பவர் தற்காலிகமாக / நிரந்தரமாக குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்ய, 30 நாட்களுக்கு முன்னரே ஆணையருக்கு எழுத்து பூர்வமாக தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பினை துண்டிப்பு கட்டணம் செலுத்தி, துண்டிப்பு செய்து கொள்ளலாம்.

18. 1. அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிறபழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ரூ.250/– அளவுமானி பரிசோதனை கட்டணமாக செலுத்தி, எழுத்து மூலம் அறிவிப்பு செய்து கொள்ள வேண்டும்.

2. மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின், தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி வந்தாலோ, அளவுமானியில் பழுதுகள் இல்லை என்றாலோ வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

19. 1. ஒரு மாதத்திற்கும் மேலாக அளவுமானி பழுதடைந்திருந்தாலோ, அல்லது அளவுமானி சரியான அளவீட்டைக் காட்டவில்லை எனக் கண்டறியப்பட்டாலோ, முந்தைய ஆண்டின் அதே மாதத்தில் செலுத்தப்பட்ட நுகர்வுக் கட்டணங்கள் கணக்கிடப்படும். நகரப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால், கணக்கிடப்படும் நுகர்வுக் கட்டணங்கள் இறுதியானவை.

2. அளவுமானி அளவீடு எடுக்கும்பொழுது, வீடு பூட்டப்பட்டிருந்தால், குறைந்தபட்ச கட்டணம் வசூலிக்கப்படும். மீட்டர் அளவீடு பின்னர் எடுக்கப்பட்டு, ஏற்கனவே செலுத்தப்பட்ட கட்டணம், போக தண்ணீர் கட்டணம் அதிகமாக இருந்தால், தொகையில் உள்ள வித்தியாசம் அடுத்தடுத்த கேட்புடன் இணைத்து வசூலிக்கப்படும்.

3. அளவுமானி அளவீடு எடுக்கும்பொழுது, இரண்டு முறைக்கு மேல் வீடு பூட்டப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், மாநகராட்சி மூலம் குறைந்தபட்ச கட்டணங்களை வசூலிக்கப்படும். கட்டிட உரிமையாளர்/குடியிருப்பவர் மாநகராட்சியால் விதிக்கப்படும் குறைந்தபட்ச குடிநீர் கட்டணத்தை செலுத்தத் தவறினால், மாநகராட்சியால் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும், பின்னர் கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணங்களுடன் மறுஇணைப்பு கட்டணம், துண்டிப்பு கட்டணம், சாலை பழுதுபார்ப்பு / மறுசீரமைப்பு கட்டணங்களும் செலுத்தப்பட வேண்டும்.

20. மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்யும் போது, இணைப்புகள் மற்றும் குழாய்கள் சேதமடைந்த நிலையில் இருப்பது கண்டறியப்பட்டால், கட்டிட உரிமையாளர்/குடியிருப்பவருக்கு பழுதுகளை சரிசெய்ய அறிவிப்பு வழங்கப்படும். பழுதுகள் உடனடியாக சரிசெய்யப்படாவிட்டால், மாநகராட்சி மூலம் பழுதுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு ஆகும் செலவினத்தை கட்டிட உரிமையாளர்/குடியிருப்பவரிடமிருந்து குடிநீர் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

21. கட்டிட உரிமையாளர்/குடியிருப்பவர் வீட்டு உபயோகத்திற்காக குடிநீர் இணைப்பு பெற்று, வீட்டு உபயோகம் அல்லாத பயன்பாட்டிற்கு, பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், அந்த மாதத்திலிருந்து வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்பிற்கு பெறப்படும் கட்டணங்களின்படி, கட்டிட உரிமையாளர்/ குடியிருப்பவரிடமிருந்து வசூலிக்கப்படும். வீட்டு உபயோகத்திற்கு பெறப்படும் குடிநீர் இணைப்பினை, வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பாக கட்டிட உரிமையாளர்/ குடியிருப்பவர் மாற்ற விரும்பினால், மாநகராட்சிக்கு விண்ணப்பம் செய்து ரூ.2000/– அபராதம் செலுத்தி மாற்றிக் கொள்ளலாம். அபராதத் தொகை அடுத்தடுத்த மாதாந்திர குடிநீர் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

22. கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் மாநகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்பு பெற்றுள்ளது கண்டறியப்பட்டால், அந்த இணைப்பு **அங்கீகரிக்கப்படாத இணைப்பாகக்** கருதப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள அபராதத் தொகையுடன், புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் முறையை பின்பற்ற வேண்டும்.

அ) 13 ½ அரையாண்டு குடிநீர் வரியுடன், வீட்டு உபயோகத்திற்கு–ரூ. 10,000/–

ஆ) 13 ½ அரையாண்டு குடிநீர் வரியுடன், வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பிற்கு– ரூ.20,000/–

23. பொது கழிப்பிடங்கள், சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கழிவறைகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டிய இடங்களில், அதற்கு தேவையான குடிநீரை பெறுவதற்கு சாத்தியமான இடத்தில், நீர்சேகரிப்பு மற்றும் தேவையான உபகரணங்களுடன் ஒரு தொட்டி நகரப்பொறியாளர் அறிவுரையின்படி, கட்டப்பட்டு, அதற்கான இணைப்பு வழங்கப்படும்.

24. பாய்லர் தொழிற்சாலைகளுக்கு/ பெரும் நிறுவனங்களின் கொதி கலன்களுக்கு குடிநீர் இணைப்பு தேவைப்படின், அதற்கு தனியான நீர்சேகரிப்பு தொட்டி அமைத்து குடிநீர் பெற்று கொள்ள வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் நீர்சேகரிப்பு தொட்டிக்கு தனியாக திறப்பான், இதர உபகரணங்கள் மற்றும் ஒலி எழுப்பும் கருவி பொருத்தப்பட வேண்டும். அவை மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்யும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

25. திருமணம் அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களுக்கு தற்காலிக குடிநீர் இணைப்பு பெறுவதற்கு, படிவம்–3ல் காணும் விண்ணப்பத்துடன், ஆணையர் அவர்களது ஒப்புதலுடன், ஒரு இணைப்பிற்கு, ஒரு நாளைக்கு 20 KL வரை குடிநீர் பெறுவதற்கு கட்டண தொகையாக ரூ.2,000/–ம், நடப்பில் உள்ள சாலை பழுதுபார்ப்பு / மறுசீரமைப்பு கட்டணங்களும், செலுத்தி தற்காலிக குடிநீர் இணைப்பாக பெற்றுக் கொள்ளலாம். மேற்கண்ட இணைப்பிற்கு தேவையான குழாய்கள், பொருத்திகள் மற்றும் இதர உபகரணங்கள் விண்ணப்பதாரர்களால் தங்களது சொந்த செலவில் மாநகராட்சி அலுவலரின் மேற்பார்வையில் அமைத்து கொள்ள வேண்டும். மேலும் 5 நாட்களுக்கு மேல் தற்காலிக குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

26. சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர், மாநகராட்சி மூலம் வழங்கப்படும் அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கான விபரங்களை, படிவம்–4ல் கண்டுள்ளவாறு, வீட்டிணைப்பு அளவுமானி பதிவேடு, அளவுமானி கணக்கீடு பதிவேடு மற்றும் அட்டவணை ஆகியவை பராமரிக்க வேண்டும்.

27. ஒரு வருடத்திற்கு பதிவு செய்யப்பட்ட அளவுமானி பதிவுகளை, மாநகராட்சி இளநிலை பொறியாளர் / உதவி பொறியாளரால் 5%க்கு குறையாமல் சரிபார்க்க வேண்டும். உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள அலுவலரால் 24 அளவுமானி பதிவுகளுக்கு குறையாமல் சரிபார்க்க வேண்டும். உதவி வருவாய் அலுவலர் / வருவாய் அலுவலர் பிரிவு கணக்கர் நிலையில் உள்ள அலுவலரால், 25% குறையாமல் வரவு சரிபார்க்க வேண்டும்.

28. மாநகராட்சி மூலம் வீட்டு வளாகத்திற்குள் அல்லது வெளியே வழங்கப்படும் அனைத்து குடிநீர் இணைப்புகளும் மாநகராட்சி கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும். கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் பெறப்பட்ட குடிநீர் இணைப்பினை பராமரிக்கவும் / பழுது பார்ப்பது / மாற்றியமைப்பதற்கு தங்களது சொந்த செலவில், மாநகராட்சி அலுவலரின் மேற்பார்வையில் செய்து கொள்ளலாம்.

29. 1. கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர், குடிநீர் இணைப்பிற்கு பொருத்தப்பட்ட அளவுமானிக்கு வைக்கப்பட்டுள்ள சீல் / பூட்டு / கண்ணாடிப் பகுதியை உடைக்க முயற்சிக்கவோ / திறக்கவோ / அதன் அளவீடுகளை மாற்றவோ / அளவீட்டுப் பாதையைத் தடுக்கவோ முயற்சிக்கக்கூடாது.

2. கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர், அளவுமானிக் கருவிக்கு, குடிநீர் செல்வதற்கு முன் தண்ணீர் எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

30. 1. இவ் உபவிதி அமுலுக்கு வரும்பொழுது இதற்கு முன் நடைமுறையில் இருந்த செயல்முறைகள் / திருத்தப்பட்ட துணை விதிகள் / உபவிதிகளும் காலாவதியாகிவிட்டதாக கருதப்படும்.

2. கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவர் **புதிதாக குடிநீர் இணைப்பு பெறுவதற்கு** விண்ணப்பிக்கும் பொழுது, நடப்பாண்டு வரை அனைத்து வரிகளையும் செலுத்தி, அதன் ரசீது நகல்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

31. மாநகராட்சியால் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பினை வேண்டுமென்றே சேதப்படுத்தினாலோ / குடிநீரை தவறாக பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், சம்மந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவருக்கு 24 மணி நேரத்திற்குள் பதிலளிக்குமாறு எச்சரிக்கை அறிவிப்பு வழங்கி, உடனடியாக குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும். இத்தகைய நேர்வுகளில் கட்டிட உரிமையாளர் / குடியிருப்பவருக்கு ஏற்படும் எவ்வித இழப்பிற்கும் மாநகராட்சிக்கு பொறுப்பேற்காது.

32. மாநகராட்சி பொருட்கள் / சொத்துக்களின் மீது சேதம் விளைவிப்பவர்கள் மீது கீழ்க்கண்டவாறு தண்டனைக்கு உட்படுத்தப்படும்.

முதன்முறையாக ரூ.500/– வரை அபராதம் விதிக்கப்படும். எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்த பிறகும் குற்றம் தொடரப்பட்டால், ஒரு நாளைக்கு ரூ.100/–வீதம், ஒவ்வொரு நாளைக்கும், அபராதம் விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைக்கப்படுமானால் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன், சட்டப்படி மேல்நடவடிக்கை தொடரப்படும்.

33. 1. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் தனித்தனி குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அன்றாட நுகர்வுக்காக லாரிகள் / HDPE தொட்டிகள் / பொதுக் குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இருப்பினும், இப்பகுதியில் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இல்லாத போது, மாமன்ற ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரிடம் ஒப்புதல் பெற்ற பின்னரே, லாரிகள் / HDPE தொட்டிகள் / பொதுக் குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

2. எவர் ஒருவரும் குடிநீர் குழாயிலிருந்து 30 லிட்டருக்கு மேல் கலன்களில் குடிநீர் பிடித்தல் கூடாது.

அ) தீயணைப்பு போன்ற அசம்பாவித சூழ்நிலைகள் ஏற்படும் சமயம் தவிர பொதுக்குழாயிலிருந்து எடுக்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆ) பொதுக்குடிநீர் குழாய்களில் குளிக்கவோ, துணி துவைக்கவோ, கால்நடைகளை சுத்தம் செய்யவோ அல்லது வாகனங்களை சுத்தம் செய்யவோ யாரும் அனுமதிக்கப்படக்கூடாது.

இ) மற்றவர்கள் காத்திருக்கும்போது, யாரும் பொதுக் குழாய்களில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட முறை குடிநீர் பிடித்தல் கூடாது.

3. குடிநீர் திட்டங்களில் நிர்ணயம் செய்யப்பட்டவாறு, குடிநீர் திட்டம் செயல்படுத்தும் போது, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளைத் தவிர வேறு எந்த பகுதியிலும், புதிதாக பொதுக்குடிநீர் குழாய்கள் அமைக்க கூடாது. அப்பகுதிகளில் வசிக்கும் வீடுகளில் 50 சதவீதத்திற்கு மேல் குடியிருப்பு இணைப்புகள் பெறாவிட்டால், பொதுக் குடிநீர் குழாய் அமைக்கப்பட வேண்டும்.

4. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில், தற்போதுள்ள பொதுக்குடிநீர் குழாய்களை பராமரிப்பதற்கும் அல்லது மொத்த குடிநீர் விநியோகமாக மாற்றுவது குறித்தும் ஆணையர் முடிவு செய்யலாம். அப்பகுதியின் பயனாளிகளிடமிருந்து சமூக அடிப்படையிலான அமைப்பு (CBO) பெயரில் "NIL" சொத்துவரிவிதிப்பு செய்து, குடிநீர் கட்டணங்கள் வசூலிக்கலாம்.

5. மாநகராட்சி பொதுக்குடிநீர் குழாய் / கம்பங்கள், பொது நீரூற்றுகள் – ஹைட்ரண்ட்களில் இருந்து பெறப்படும் குடிநீரினை யாரும் வீணாக்குதல் / தவறாக பயன்படுத்துதல் கூடாது.

**விதிமீறல் பிரிவு**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (1999 ஆம் ஆண்டு சட்டம்) பிரிவு 199(2)ன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி, துணைச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறுவதற்கு ரூ.5,000/-க்கு மிகாமல் அபராதம் விதிக்க மாமன்றத்திற்கு அனுமதி உண்டு.

**குறிப்பு**

குடிநீர் துணை விதிகளின் நகலினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஒரு நகலுக்கு ரூ.100/- வீதம் பெற்றுக் கொண்டு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4/4728 /2025/ மையம்**

**TIRUCHIRAPPALLI CITY MUNICIPAL CORPORATION**

# Water Supply Byelaws

In exercise of the powers conferred under sub-section (1) of section 199 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act of 1999) the Council of Tiruchirappalli City Municipal Corporation, hereby makes the following Bye-law with the approval of the Director of Municipal Administration for regulation of Drinking water supply.

1. i. Drinking water supply connection shall be provided only to the houses / buildings assessed by the Municipal Corporation for payment of property tax.
   ii. For getting drinking water supply connections, the owner / tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the fees of Rs.100/-, details indicated in the Form 1 and property tax remittance etc.,
   iii. The City Engineer or his/her authorized officer shall scrutinize the application and advise the owner/tenant to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more instalments (not more than 10 instalments) along with charges towards inspection, road restoration and Centage.
   iv. Though, the Commissioner or his/her authorized officer shall thereafter issue order in Form 2 to provide Drinking water service connection. The connections shall be given through the Municipal Corporation Trained Plumbers / Contractors to be engaged by the owner/tenant, under supervision by Municipal Corporation authorities in the order of seniority prepared based on the date of registration of application.
2. i. For getting drinking water supply connections in the new water supply system provided or being provided as part of any comprehensive water supply improvement scheme, the owner / tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/- (non-refundable), details indicated in the "Form 1" and copy of property tax remittance etc,. The Commissioner or his/her authorized officer shall thereafter issue order in Form 2 to provide drinking water service connection.

ii. The drinking water service connection shall be given through the civil works Contractor engaged by the Municipal Corporation / Parastatal Agency namely Tamil Nadu Water supply and Drainage Board under any water supply improvement scheme. The Contractor, upon recommendation/approval by the City Engineer, shall provide drinking water service connection under the any water supply improvement project.

iii. The City Engineer or his/ her authorized officer, shall advise the applicants to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more instalments (not more than 10 instalments) along with Property tax as ordered by the Commissioner. The Parastatal Agency / City Engineer or his/ her authorized officer, shall ensure that all the assessed properties (both domestic and non-domestic) are provided with drinking water supply service connections without any omissions.

3. The application submitted under bye-law in "Form-1" and "Form-2" received along with the requisite documents will only be considered for providing drinking water supply connection.

4. The Municipal Corporation shall levy the water charges based on the plinth area of the building as per the rates provided in Table-2 for both domestic and non-domestic connections. The water charges shall be levied either on a fixed flat rate basis or based on the volume of water consumed and billed subject to a minimum monthly charge irrespective of the volume of water consumed.

5. i. The Municipal Corporation shall determine whether a drinking water supply connection is domestic or non-domestic depending upon the type of assessment and the charges shall be levied accordingly.

ii. The Municipal Corporation shall levy the charges based on **non-domestic category** even though the applicant uses it for domestic purposes in case of the following fully/partially constructed buildings.

a. The drinking water supply connections to manufacturing units, business concerns, garden, buildings structures, fountain, swimming pools, luxury resorts and mechanical consumptions, sale place of cattle, firms, private organizations private hospitals, private veterinary hospitals, lodges, recreational places, hotels, theatres and any other business places.

b. The drinking water supply connections to buildings owned/leased/rented by business organizations such as Railways, Military, Sub-Jail, Police, Airport, Medical College, security organizations etc, will be considered as non-domestic connections.

c. **The commercial water connection** shall include connections to commercial buildings related to business and work-related buildings which include canteens, restaurants, tea/coffee shops, Marriage halls, theatres and other business places.

iii. **Industrial water connections** shall include connection to industrial buildings and all other organizations certified under the Factories Act, 1948 such as soda making companies, Aavin, ice manufacturing companies, rice mills and all Small-Scale Industries.

a. The water connections to buildings owned by the Municipal Corporation and maintained by tenants or lessees shall be classified as domestic or non-domestic connection depending on the end use of the building.

b. All commercial and industrial connections other than domestic shall be classified as non-domestic.

6 i. For a domestic water connection, the charges will be levied as per non-domestic rates if the consumption is found to be more than twice the base level of supply as specified in Table-2 consecutively for two billing periods.

ii. If any building with a water connection is demolished, then the water connection shall be disconnected.

iii. In case of construction of additional floors/area or major renewal works are carried out in the existing domestic building using the Municipal Corporation water, then the water consumption will be considered as non-domestic, and charges shall be levied accordingly.

iv. On completion of such additional construction/renewal works, the consumer shall apply for revised tax assessment to the Municipal Corporation and shall pay the additional charges including, penal charges as applicable and to get an order for conversion to a domestic connection may be given by the Municipal Corporation authorities after verification / inspection.

7. i. For every household assessed under property tax, one water supply connection shall be given. For those connections, flow control valve and gate valve shall be fixed to control the flow of water. Households having water supply connections shall use water only for their exclusive uses and shall not supply water to other households having no water supply connection.

ii. For the purpose of providing Water supply connection for **Multi-storey buildings / Apartments / Flats.**

a. While giving water supply connections to apartments having two or more households, **every household (No. of Property tax assessment) shall be separately assessed, and deposit shall be collected separately from each of the Multi-storey buildings / Apartments / Flats.**

b. Irrespective of multiple property tax assessments in an apartment, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each flat. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of dwellings; total water supply demand etc. and the water service connection shall be provided after getting approval of the Commissioner.

c. Every Property tax assessment should be treated as single unit for assessment of water supply connection and deposit may be collected separately. Connections may be given, as decided by the City Engineer and User charges may be collected as Non-domestic purposes with meter system and its details are specified in the Table below:-

| Sl. No | Apartments | No. of Connection | Deposit & Tariff | Size of Pipe (in. dia) |
|---|---|---|---|---|
| 1 | Up to 4 Flats | I connection | Refer Table (1) and (2) | 20 mm pipe 15mm Ferrule (OR) as decided by the City Engineer |
| 2 | For 5 to 8 Flats | 2 connection | | |
| 3 | For 9 to 12 Flats | 3 connection | | |
| 4 | Above flats | 1 connection for each 4 flats | | |

8. **1. Water supply connections in places of worship** (temple, mosque, church, etc.), used for public consumption purposes only, will be provided as follows:

a. The bye-law applicable for providing domestic connections shall be applicable for providing water supply connections to places of worship.

b. The administrators of the places of worship are responsible for laying pipelines, maintaining and removal of the same. The costs of maintenance shall be borne by them. The pipe lines shall have 15 mm diameter and shall be fixed with automatically closing water taps to prevent water losses.

c. The water supply shall be used only for consumption and the charges shall be levied as per domestic rates.

d. Non-domestic water supply connections shall be provided to the shops and other commercial complexes located near by the worship places which are maintained by the same administrators after payment of deposit and all other charges as applicable.

9. 1. **Water Supply to Government buildings, educational institutions and Hospitals**.

The Buildings used for Government educational Institutions and Government Hospitals are exempted from payment of property tax and the water supply charges will be collected as per domestic charges.

2. **Government office buildings and Public sector units:**

a. While giving water supply connections, the assessment shall be ensured and the bye-law applicable for providing non-domestic water supply connections shall be followed.

b. For providing Water supply connections to the **Anganwadis and Municipal School buildings**; such buildings are exempted to pay water supply charges.

Irrespective of property tax assessments, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each building within the premises. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of students and officials, total water demand etc. and the water service connection(s) shall be provided after getting approval of the Commissioner.

10. a. While providing water supply connections, ferrules or flow control valves shall be fixed to ensure water supply at the rate of 5 litres per minute (lpm) per connection for domestic connections. All accessories for providing water supply connections such as stoppers, valves, meters etc., including the length of the pipe will be determined by the City Engineer or by his/her authorized representative in accordance with the following pipe sizes.

    i. Connection with 15mmdiameter pipe –10mmferrule.
    ii. Connection with 20mmdiameter pipe – 15mmferrule.

    If any other measure is required, the same shall be decided by the City Engineer. All the fittings, ferrules, meters etc. shall comply with relevant IS Codes and Standards.

    b. If the water service pipeline happens to be taken across ditches, underground drainage or small bridges, which the City Engineer considers the same may cause damage to the pipes or may contaminate the water, then iron casing pipes shall be used for protecting the service connection pipes.

11. When the water connection has to be provided for a domestic supply, which is more than 90 meters distance from the water distribution network, the City Engineer not below the rank of Executive engineer or the Regional Executive Engineer shall inspect the building premises and assess the technical feasibility of providing a water supply service connection duly following the above bye-law and provide the connection. If it is found to be technically not feasible, then shall examine whether the existing distribution system could be extended provided the extension shall be carried out in a public road and the design shall comply with the requirements as per CPHEEO Manual so as to provide the water service connection.

12. a. The fittings, joints, meters, taps, valves etc. used for providing the water supply service connections shall generally be visible for carrying out inspection by the City Engineer or by his/her authorized persons by the Municipal Corporation. The building owner / tenant shall facilitate the authorities to monitor/inspect the provision of water service connections. Any objection by the owners/tenants will result in disconnection.

    b. While providing water service connections, all appurtenances shall be mounted within the building premises in a conspicuous area preferably near the entrance, from where the owners/tenants shall tap the water into their underground/ground level/elevated storage facilities.

    c. No electrical motors or pumps of any kind shall be used for sucking water directly from the water distribution pipeline. If the same is detected, the water supply connections will immediately be disconnected, and all such appliances will be seized. If the same is detected for the second time, the Municipal Corporation shall initiate legal proceedings against the owner/tenant.

    d. If the owner/tenant whose water connection is disconnected due to usage of mechanical devices for sucking water directly from the distribution system, applies for water supply connection again, shall pay a penalty of Rs.10,000/- along with an undertaking, that such devices will not be fitted in future and payment of disconnection & reconnection charges, road restoration charges as mentioned in rule 16(4) and an additional Fine amount equivalent to six half yearly (3 years) water charges should be collected.

| * This is the base rate for the plinth area of 1801 sq.ft. The deposit for the plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

**Table-2:User Charges for Under Ground Drainage Connections**

| **Plinth Area of Assessment in Sq.ft** | **User Charges for Under Ground Drainage Connections (From 01.04.2025) (in Rs./connection / month)** | | | |
|---|---|---|---|---|
| | **Domestic** | **Non-Domestic** | **Industrial** | **Educational Institution/ Government Offices /Others** |
| **Municipal Corporation** | | | | |
| <=600 | 100 | 300 | 300 | 300 |
| 601-1200 | 140 | 420 | 420 | 420 |
| 1201-1800 | 180 | 540 | 540 | 540 |
| 1801* | 220 | 660 | 660 | 660 |
| * This is the base rate for the plinth area of 1801 sq.ft. The user charges for the plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

2. The Under Ground service connection deposit and user charges shall be increased at the rate of 10 % once in 5 years, so as to cover the cost of operation and maintenance of the entire Underground drainage system.

3. The owner / occupant, who have already availed the House Service Connection, shall also be required to be pay the remaining / difference amount of deposit for Under Ground drainage to the extent of the present rate of such deposit.

19. 1. 100 mm pipes shall be laid from machine hole to the premises of the Individual Households / Residents, where UGD to be provided.

2. UGS for Multi-storey building/Apartments/Group Houses, shall be provided as indicated in the below table irrespective of the total number of house hold in the Multi-storey buildings, apartments and group houses.

**Table**

| Sl. No | Apartments | No. of Connection | Deposit | Size of Pipe (in. dia) |
|---|---|---|---|---|
| 1 | Upto 4 Flats | I connection | Refer Table (1) & (2) | 100mm dia pipe |
| 2 | From 5 to 8 Flats | 2 connection | | 150mm dia pipe |
| 3 | From 9 to 12 Flats | 3 connection | | 200mm dia Pipe |
| 4 | above 12 Flats | 1 connection / 4 Flats | | As decided by City Engineer |

**Provided that <u>every Property tax assessment should be treated as single unit for assessment of UGD Deposit and User charges.</u>**

3. The tenants / households in the apartments or Multi-storey building or group houses shall pay caution deposit and user charges as treating them as Single unit.

20. The user charges for the purpose on worship places like mosque, temples and churches will be treated as Domestic purpose. If any one of their property used other than worship purposes is to be taken on commercial and charge will be levied accordingly.

21. Demand for UGS charges will be made 10$^{th}$ of every month on succeeding every quarter.

22. If the amount is not paid in the above period, the Commissioner or his/her authorized officer, shall be at liberty to cut off the service, after the demand is made. If the amount is not paid within the above, the Commissioner shall not be liable for any damages for such disconnection.

23. 1. No connection will be provided to the premise which is not levied with property tax.

2. If an existing domestic underground connection is in the building, which will be reconstructed or modified or major repairs made, connection will be taken into account as non-domestic purpose and the rate of charges will be collected accordingly.

24. Payment for all Under Ground sewage connection under the terms and conditions laid down in these bye-laws is not made by the party concerned within the time stipulated, it shall be recoverable in the same manner as within the norms for property tax collection.

25. Every person to whom Under Ground Sewage connection is or has been provided by the Municipal Corporation shall maintain the Under Ground Sewage connection in good condition and repairs at his own cost.

26. The City Engineer or his / her authorized officer, may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the conditions of or repairing of such fittings. If on such examination or otherwise, it is found that the pipes or fittings are defective in any respect, the Executive Authority may give notice to the owner or occupier of the premises to execute within a specified time period or one month at the most, if the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the time allowed in the notice or if the defect is likely to cause contamination of water, the Executive Authority may himself / herself execute such work and recover the cost from the owner or occupier or alternatively the connection will be disconnected.

27. Under Ground Sewage connection provided for domestic purpose and the same shall not be used for non-domestic purpose without prior approval from Commissioner. But, if the Commissioner finds that the drainage connection is being used for non-domestic purpose or has reasons to believe so, they may require the house connection owner or the resident to pay charges for non-domestic use as determined under Bye-law 24, from the date of notice. If the charges so determined are not paid, the Commissioner may order the disconnection of the house connection.

28. All house service connections granted before date of commencement of these bye-law come into force shall be recognised as valid as if they had been granted under these bye-law and shall be recognized as authorized connection under the provisions of these bye-law, if the owner or occupier remits the rate applicable under these bye-laws. If the said charges are not paid under these bye-laws and such connections are to be treated as for non domestic **illegal connections** and fine will be imposed at the rate of Rs.3,000/- for domestic and Rs.6,000/- for non domestic. These connections are to be disconnected with fine. For continuous offence, the House Service Connection will be disconnected permanently.

29. 1. Under Ground drainage connection given for Government Educational Institutions and Government Hospitals are exempted from payment of property tax and the User charges will be collected as Domestic charges.

2. While giving Under Ground Drainage connections to Government Office Buildings and Public Sector Units, procedure shall be ensured for providing non-domestic connections.

30. **Violation Clause:**

The Corporation Council may provide penalties in the by-laws and regulations to impose fine not exceeding Rs.5,000/- for violation of such by-laws and regulations in accordance with the rules framed under section 199(2) of Tamil Nadu Urban Local Bodies Act 1998. (Act of 1999)

**Note:**

A copy of by-law shall be given to the public for sale at the cost of Rs.100/-.

**Office Note:**

May be approved.

**E7/4730/2025/main**

**தீர்மானம் எண்: 601 பொருள்: 2 விவாதம் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள்: 3**

அரசாணை எண். 103, நிதித்துறை (கொள்முதல்) நாள்.05.05.2025– இல், மாநில அரசு அலுவலர்கள் (மற்றும்) உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் / பணியாளர்களுக்கு 2025–2026ம் நிதியாண்டு முதல் , ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத் தொகை ரூ.10000/– இல் இருந்து ரூ.20000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண்.121 நிதி (ஓய்வூதியம்) துறை நாள்.22.05.2025 – இல், மாநில அரசுத் துறையின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு, 2025–2026 ம் நிதியாண்டு முதல் , ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத் தொகை ரூ.4000/– இல் இருந்து ரூ.6000/– ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(பி2 / 11094 / 2025 (மையம்))

**தீர்மானம் எண்: 602 பொருள்: 3 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

©

**Government of Tamil Nadu**
**2025**

**MANUSCRIPT SERIES**

## FINANCE [Procurement Cell] DEPARTMENT
## G.O.Ms.No.103, Dated 05th May 2025.

*(விசுவாவசு, சித்திரை-22, திருவள்ளுவர் ஆண்டு-2056)*

**ABSTRACT**

**ADVANCE – Festival Advance to Government Employees** – Enhanced - Orders - Issued.

**Read:-**

G.O.Ms.No.240, Finance (Salaries) Department, Dated: 02-08-2019.

**-oOo-**

**ORDER**:

In the Government Order read above, orders have been issued directing that the Festival Advance payable to the Government employees, Teachers, Teaching and Non-Teaching Staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance be enhanced from Rs.5,000/- to Rs.10,000/-.

2. In the Budget Session 2025-2026, the Hon'ble Chief Minister has announced various welfare announcements to Government employees in the Legislative Assembly under Rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules and one of the announcement is as follows:-

"அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்."

3. The Government after careful consideration, direct that the Festival Advance payable to the Government employees, Teachers, Teaching and non-Teaching staff of the local bodies, aided educational institutions and the employees who are eligible to draw the Festival Advance be enhanced from Rs.10,000/- to Rs.20,000/- (Rupees Twenty Thousand Only). There shall be no change in the existing procedure for sanction and recovery of Festival Advance.

4. These orders shall take immediate effect and apply to festivals to be celebrated after the date of issue of this order.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

To
All Secretaries to Government, Chennai-600 009.
All Departments of Secretariat (OP/Bills), Chennai-600 009.

-2-

The Secretary, Tamil Nadu Legislative Assembly, Chennai-600 009.
The Secretary to the Governor, Chennai-600 022.
The Comptroller, Governor's Household, Raj Bhavan, Chennai-600 022.
The Governor's Secretariat, Raj Bhavan, Guindy, Chennai-600 022.
All Departments of Secretariat, Chennai-600 009.
All Heads of Departments.
All Public Sector Undertakings and Statutory Boards.
All District Collectors / All District Judges / All Chief Judicial Magistrates.
The Accountant General (A&E) Chennai-600 018.
The Accountant General (Audit-I) Chennai-600 018.
The Accountant General (Audit-II) Chennai-600 018.
The Accountant General (CAB) Chennai-600 009 / Madurai.
The Director of Treasuries and Accounts, Chennai-600 035.
All Pay and Accounts Officers.
All Treasury Officers / Sub-Treasury Officers.
The Chief Internal Auditor and Chief Auditor of Statutory Boards, Chennai-600 002.
The Chairman / Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai-600 003.
The Registrar, High Court, Chennai-600 104 / Madurai Bench of Madras High Court, Madurai.
All Commissioners of Tribunal for Disciplinary Proceedings.
The Registrars of all Universities.
The Commissioner, Greater Chennai Corporation.
The Commissioner of All Corporations.

**Copy to:**

The Secretary to the Hon'ble Chief Minister, Chennai-600 009.
The Chief Minister's Office, Chennai-600 009.
The Special Personal Assistant to Hon'ble Finance Minister, Chennai–600 009.
The Senior Principal Private Secretary to the Chief Secretary to Government, Chennai-600 009.
The Senior Principal Private Secretary to Principal Secretary to Government, Finance Department, Chennai-600 009.
All Officers in Finance Department, Chennai-600 009.
All Sections in Finance Department, Chennai-600 009.
All Recognised Associations.
Stock File / Spare Copies.

**// Forwarded : By Order //**

வை. கந்தசாமி.

**SECTION OFFICER.**

05/09/2025

©

தமிழ்நாடு அரசு
2025

கையெழுத்துத் தொடர்

வாய்மையே வெல்லும்

## நிதி (ஓய்வூதியம்) துறை

**அரசாணை எண்.121, நாள்: 22.05.2025**

*(வைகாசி – 8, திருவள்ளுவர் ஆண்டு 2056)*

**சுருக்கம்**

முன்பணம் – ஓய்வூதியதாரர்களுக்கான பண்டிகை முன்பணம் – பண்டிகை கால முன்பணத்தை உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.285, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 18.02.1971.
2. அரசாணை (நிலை) எண்.836, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 31.07.1976.
3. அரசாணை (நிலை) எண்.241, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 02.08.2019.

-¢¢¢¢¢-

**ஆணை**

மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால முன்பணம் வழங்க சில நிபந்தனைகளும், திருத்தங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால முன்பணம் 2,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு முதலமைச்சர் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> *ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.*

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா)

: 2 :

5. இந்த பண்டிகை முன்பணம் உயர்வு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இந்த ஆணை வெளியிடப்பட்ட நாளுக்கு பிறகு கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கு பொருந்தும். இப்பண்டிகை முன்பணமானது பத்து மாதங்களுக்கு சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

6. மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்ட மற்ற நிபந்தனைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த.உதயச்சந்திரன்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

அனைத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை– 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை– 600 022.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.19, அரசு பண்ணை இல்லம், பெர்ன்பெட், நந்தனம், சென்னை– 600 035.
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை– 18. (பெயரில்)
மாநில கணக்குத்துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை– 18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை– 600 009.
தலைமை தணிக்கை இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை 600 035.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை– 600 003.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை–600 035.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை– 600 035.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

**நகல் பெறுநர்:**

மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் – I, சென்னை–600 009.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்கள் (II, மற்றும் III), சென்னை–600 009.
மாண்புமிகு முதலமைச்சரின் இணைச் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலைமாற்றத் துறை அமைச்சரின் இளநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600009.
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலாளர், சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், நிதித்துறை, சென்னை – 600 009
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை–600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில் நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்).
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள்/மண்டல அலுவலகங்கள்– கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநரகம் – ஓய்வூதியப் பிரிவு சென்னை–600 035. (மூலமாக)
அனைத்து பொதுத் துறை வங்கிகள் – கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநரகம் – ஓய்வூதியப் பிரிவு, சென்னை–35. (மூலமாக).
தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை–600 006.

: 3 :

தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க்சாலை, கீழ்பாக்கம், சென்னை- 600 010.
தலைவர், தமிழ் நாடு ஓய்வூதியர் சங்கம், பதிவு எண்-84/2010 எண்.7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை- 600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் - 609 001.
தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண்.35, திரு.வி.க.நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை-600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண்.38-பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்து காளத்தி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், ப்ளாட் எண்.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.
தலைவர், ஓய்வுபெற்ற வேளாண்மை பட்டதாரி சங்கம், கே-பிளாக், எண்.2, சாலை ரோடு, ஹவுசிங் யூனிட், திருச்சி - 621 003.
தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, எண்.11, நாச்சிமுத்து லேஅவுட், கே.கே.புதூர், கோயம்புத்தூர் - 641 038.
தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அனைத்து ஓய்வூதியர்கள் சங்கம், மாநில மையம், எண்.50-A,காந்திஜி தெரு, தொரப்பாடி, வேலூர் - 632 002.
தலைவர், தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் சங்கம், வரதப்பன் தெரு, கோட்டை, சேலம் - 636 001.
தலைவர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஓய்வூதியர்கள் சங்கம், டி.என்.ஏ.யு வளாகம், கோயம்புத்தூர் - 641 003.
தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம், எண்.3(ஜி1), கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.
தலைவர், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொதுப்பணித்துறை ஊழியர் சங்கம், எண்.3/454, வீரமா முனிவர் தெரு, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037.
தலைவர், ஊரக வளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் சங்கம், எண்.3/145, தெற்குத் தெரு, கம்பரசம்பேட்டை அஞ்சல், திருச்சிராப்பள்ளி-620 101.
தலைவர், தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், M.R.அப்பன் இல்லம், 3/1076-2, முத்துராமலிங்கம் நகர், விருதுநகர்.
மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம், மாநில மையம், எண்.22/32, F-3, வேதவல்லி அடுக்ககம், ஆரிமுத்து (ஆ) தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், பிளாட் எண். 1740, B2, இரண்டாவது தளம், 18-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை-600 040.
ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் கூட்டமைப்பு, எண்.63, TNHB குடியிருப்பு, ஆவடி, சென்னை - 600 054.
தலைவர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொதுப்பணித் துறை ஊழியர் சங்கம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், சேப்பாக்கம், சென்னை-600 005.
தமிழ்நாடு இந்த் அப்சார்பி பென்சனர் நலச் சங்கம், எண் 12, 9-வது தெரு டான்சி நகர், வேளச்சேரி, சென்னை -600 042.
தலைவர், கிராம உத்தியகஸ்தர்கள் முன்சீப் கர்ணம், ஓய்வூதியர்கள் சங்கம், 10-D, ராதாகிருஷ்ணன் காலனி, முதல் தளம், சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சி.
மாநிலத் தலைவர், தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை, 1/49 நெடுங்கல் அஞ்சல், காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 112.
செயலர், தமிழ்நாடு ஓய்வுபெற்ற நீதிபதிகள் நல சங்கம், D- 39 5வது முதல் குறுக்குத் தெரு, பாரத் ரத்னா ராஜீவ் காந்தி நகர், புதூர், அம்பத்தூர், சென்னை -600 053.
**இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.**

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

22/5/2025

**பிரிவு அலுவலர்.**

22/5/25

## பொருள்: 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் .62 பஞ்சப்பூர் பகுதியில் தரைமட்ட சூரியஒளி மின் நிலையம் அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து , அனுப்பி வைக்குமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந .க.எண்.7705/2024/ADB நாள்.11.08.2025ல் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பஞ்சப்பூர் பகுதியில் 9.6 மெகாவாட் திறன் கொண்ட தரைமட்ட சூரியஒளி மின்நிலையம் அமைக்கும் (பகுதி– IV) பணியினை ரூ .65.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட திட்டப்பணிக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும் மற்றும் திட்டப்பணிக்கான நிதியினை அரசிடமிருந்து பெறுவதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட திட்டப்பணியினை ரூ .65.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு அனுமதி அளிக்கலாம்
2. மேற்கண்ட திட்டப்பணிக்கான நிதியினை அரசிடமிருந்து பெற்று திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. இத்திட்டப்பணிக்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**இ1/10705/2025(மையம்)**

**தீர்மானம் எண்: 603 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம் பிராட்டியூர் கிராமம் பழைய புல எண் 139/4 புது எண் 20/4ல் ஹெக்0.25 ஏர்ஸ் நிலம் மயானம் என கணக்கில் தாக்கலாகியுள்ளதை தொடர்ந்து இயக்குனர் சிறுபான்மை நல இயக்ககம் சென்னை அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் கல்லறை தோட்டம் அமைக்க கோரப்பட்டுள்ளதாகவும் மேற்படி இடத்தில் கல்லறை தோட்டம் அமைக்க ஏதுவாக நிலஉரிமம் மாற்றம் செய்ய தீர்மான கடிதம் மற்றும் முன்நுழைவு அனுமதி (Enter Upon Permission) அனுப்பி வைக்குமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலவலர். திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண். பி3/40887/2023 நாள் 20.02.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நிலத்தில் கல்லறை தோட்டம் அமைக்கவும் முன்நுழைவு அனுமதி (Enter Upon permission) வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்

எப்1/6321/2025(ம–4)

**தீர்மானம் எண்: 604 பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், பின்வரும் பட்டியலில் காணும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **05.01.2024**ம் தேதியன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, வேலைவாய்ப்பு தேடும் இளைஞர்கள் மிகுந்த பயனடைந்து வருகின்றனர்.

| **வ. எண்** | **நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையங்கள் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | மண்டலம் எண்.2, வார்டு எண்.23 பாலக்கரை துணை நீரேற்று நிலையம் பகுதியில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டும் பணி. | 257.00 |
| 2 | மண்டலம் எண்.4, வார்டு எண்.44 குதுப்பாப்பள்ளம் பகுதியில் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் கட்டும் பணி. | 257.00 |

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், அவர்களின் கடிதம் ந.க.எண்.2248/2023/இ1 நாள்.20.05.2024ல், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக வழிக்காட்டுதல்களின் படி, மேற்கண்ட இரண்டு நூலகத்துடன் கூடிய அறிவு சார் மையங்களுக்கு, நூலகராகவும் மற்றும் பாதுகாப்பாளர்களாகவும் பணியாற்றக் கூடிய தகுதி வாய்ந்த ஒரு நபர் வீதம் மொத்தம் இரண்டு நபர்களை 12 மாதங்களுக்கு விநியோகம் செய்வதற்கு, M/s. Fusion Manpower & Infra Services,

திருச்சிராப்பள்ளி ஒப்பந்தக்காரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதில், மேற்படி நிறுவனம் இரண்டு நபர்களை விநியோகம் செய்து வருகின்றது.

மாமன்ற தீர்மானம் எண்.402 நாள்.24.07.2024ல், மேற்படி நிறுவனம் விநியோகம் செய்யும் இரண்டு பணியாளர்களுக்கான மாதஊதியத்தியத்தினை கல்விநிதியிலிருந்து 31.03.2025 வரை வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் பிரதி மாதந்தோறும் சமர்ப்பிக்கும் பட்டியலின் படி பின்வருமாறு அடிப்படை மாதஊதியம் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம் அமைவிடம் | விநியோகம் செய்யப்பட்ட நூலகர்/ பாதுகாப்பாளர் எண்ணிக்கை | அடிப்படை மாத ஊதியம் ரூ. (Rs.666.66 per day) | EPF தொகை ரூ. (13%) | ESI தொகை ரூ. (3.25%) | ஒப்பந்தக்கார் சேவைக் கட்டணத் தொகை ரூ.பை (5.88%) | சரக்கு & சேவைவரி தொகை ரூ.பை (18% on 5.88%) | ஒரு மாதத்திற்கான மொத்தத் தொகை ரூ.பை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பாலக்கரை | 1 | 20000 | 1950 | 650 | 1176.54 | 211.78 | 23988.32 |
| 2. | குதுப்பாப் பள்ளம் | 1 | 20000 | 1950 | 650 | 1176.54 | 211.78 | 23988.32 |
| | **மொத்தம்** | **2** | **40000** | **3900** | **1300** | **2353.08** | **423.56** | **47976.64** |

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், அவர்களின் கடிதம் ந.க.எண்.2248/2023/இ1 நாள்.18.12.2024ல், மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை 03.01.2025 முதல் 02.01.2026 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யப் பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட இரண்டு இடங்களில் செயல்பட்டு வரும் நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையங்களுக்கு நூலகராகவும் மற்றும் பாதுகாப்பாளர்களாகவும் பணியாற்றக் கூடிய இரண்டு நபர்களை மேற்கண்ட நிறுவனம் தொடர்ந்து விநியோகம் செய்து வருவதால், கடந்த ஏப்ரல்–2025ம் மாதத்திற்கு மாதஊதியம் மேற்கண்டவாறு கணக்கிட்டு வழங்கியமைக்கும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அனுமதி கடிதத்தில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவு மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதால், 01.04.2025 முதல் 02.01.2026 வரையிலான மாதங்களுக்கும் மேற்கண்ட விபரப்படி அடிப்படை மாதஊதியத்தினை கணக்கிட்டு வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் மூலம் தேர்வு செய்யப்பட்ட மேற்கண்ட நிறுவனம் இரண்டு பணியாளர்களை மாதந்தோறும் விநியோகம் செய்து வருவதில், நிர்வாக நலன் கருதி ஏப்ரல் 2025ம் மாதத்திற்கு மாதஊதியம் கணக்கிட்டு வழங்கியமைக்கும் அனுமதி அளிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், அவர்களின் கடிதம் ந.க.எண். 2248/2023/இ1 நாள்.18.12.2024ல் மேற்கண்ட நிறுவனத்தின் செயல்திறன் அடிப்படையில், மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவு 03.01.2025 முதல் 02.01.2026 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதால், மேற்கண்ட நிறுவனம் 02.01.2026 வரை விநியோகம் செய்யும் இரண்டு பணியாளர்களுக்கான மாத ஊதிய தொகையினை கல்வி நிதி 2025–26ன் கீழ் வழங்குவதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. பணியாளர்களை விநியோகம் செய்யும் மேற்படி நிறுவனத்தின் 31.07.2025 மற்றும் 04.09.2025ம் தேதிய கடிதங்களில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 18.12.2024ம் தேதிய கடிதத்தில், வேலை உத்திரவு 02.01.2026 வரை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மே–2025 மற்றும் ஜீன்–2025ம் மாதஊதிய தொகையினை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, நிர்வாக நலன் கருதி மேற்கண்ட இரண்டு மாதங்களுக்கான மாதஊதிய தொகையினை கல்வி நிதி 2025–26ன் கீழ் வழங்கியமைக்கு அனுமதி அளிக்கலாம்.

**இ1/3253/2024(மையம்)**

**தீர்மானம் எண்: 605 பொருள்: 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள்: 7

இம்மாநகராட்சியின் பராமரிப்பின் கீழ் உள்ள நீர்ப்பணி நிலையங்களான பொது தரைமட்ட தொட்டி, ஆண்டவர் ஆசிரமம் கலெக்டர் வெல் – ஆளவந்தான் படித்துறை கலெக்டர் வெல் எண்.3 ஆகியவை கொள்ளிடம் ஆற்றுப் படுகையிலும் சுப்ரமணிய நகர் இடைநிலை நீர்த்தேக்கத் தொட்டி, சுப்ரமணியபுரத்திலும் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 75.50 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நீரேற்று நிலையங்களில் குடிநீரை சுத்தம் செய்வதற்கு 313500 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கொள்முதல் செய்வதற்கும், சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை செலுத்திடும் தானிங்கி கருவிகளை சர்வீஸ் செய்திடவும் மாமன்றத் தீர்மான எண் :787, நாள் :29.11.2024ல் அன்று வழங்கிய ஒப்புதலை தொடர்ந்து , 27.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், நிறுவனத்தாருக்கு 26.02.2025 முதல் பணி உத்தரவு வழங்கப்பட்டு, சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**ஓர் ஆண்டிற்கு 25,00,000 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கொள்முதல் செய்து கொள்வதற்கு மதிப்பீடு ரூ.400.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, மாமன்றத் தீர்மான எண்.12 நாள்.26.02.2025 வாயிலாக ஒப்புதல் பெற்று, இ4/1390/2025/மையம் கோப்பின் வாயிலாக நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில், கொள்முதல் செய்த அளவுகள் ஆகஸ்ட் மாதத்தில் முடிய உள்ளதாலும், **தென்கிழக்கு பருவமழை காலம் தொடங்கவுள்ளதால்,** புதிதாக கோப்புகள் தயாரித்து விலைப்புள்ளிகள் கோருவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதாலும், **குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி,** குடிநீரால் ஏற்படும் தொற்று நோய்களிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திட, குடிநீரை சுத்தம் செய்வதற்கு சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தை கொள்முதல் செய்வதற்கு **இரண்டாம் முறையாக** காலநீட்டிப்பு செய்து , சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தை வாங்கி இருப்பில் வைத்து , சாதாரண நாட்களில் **2.00** பி.பி.எம் எனவும் மழை மற்றும் நோய் தொற்று காலங்களில் **3–4.00** பி.பி.எம் எனவும் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை பயன்படுத்திட **200000 லிட்டர்** கொள்முதல் செய்திட வேண்டியுள்ளது.

| **கொள்முதல் செய்யப்பட்ட திரவத்தின் அளவு** | **ஒப்புதல் விபரம்** | **பயன்பாடு விபரம்** |
|---|---|---|
| 313500 லிட்டர் (75 நாட்கள்) | மாமன்றத் தீர்மான எண்:787, நாள்:29.11.2024 | முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| 313500 லிட்டர் (75 நாட்கள்) | மாமன்றத் தீர்மான எண்: 309 நாள்:29.04.2025 | தற்போதைய இருப்பு சில நாட்களுக்கு மட்டுமே பயன்படுத்த இயலும். |

தற்போது சோடியம் ஹைபோ குளோரைட் திரவம் வழங்கி வரும் மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்திடம் கேட்டு கொண்டதில், அந்நிறுவனம் ஒப்பந்த விலை ரூ.13.41 பைசா என்ற விகிதத்திலேயே காலநீட்டிப்பு காலம் வரை வழங்கிட சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளது. (இரண்டாம் நீட்டிப்பு)

எனவே, குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், முதன் முறையாக காலநீட்டிப்பு செய்து, 200000 லிட்டர் சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தை தொடர்ந்து கொள்முதல் செய்திட ஏற்படும் செலவினம் ரூ .26,82,000/– +GSTக்கு அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. புதிதாக 25,00,000 லிட்டர் சோடியம் திரவம் கொள்முதல் செய்வதற்கு மதிப்பீடு ரூ.400.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் நடவடிக்கையில் உள்ளதாலும் , **தென்கிழக்கு பருவமழை காலம் தொடங்கவுள்ளதால்** , புதிதாக கோப்புகள் தயாரித்து விலைப்புள்ளிகள் கோருவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதாலும், **குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி** , ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய மெசர்ஸ் .தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், நிறுவனத்தின் மூலம் 200000 லிட்டர் (ஒரு லிட்டருக்கு ரூ.13.41/– வீதம்) சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கொள்முதல் செய்வதற்கும் , சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை செலுத்திடும் தானிங்கி கருவிகளை பராமரிப்பு செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.26,82,000/– +GST ஐ மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவினத்தை 2025 - 2026ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் குடிநீர் விநியோகம் – பராமரிப்பு செலவினம் ( **2305009)** கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2000.00 இலட்சத்திலிருந்து செலவு செய்துக் கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/8998/2024 (மையம்)**

**தீர்மானம் எண்: 606 பொருள்: 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 8

இம்மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தூய்மை பணியாளர்கள் நிலையில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களி;ன் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2,47,538 வீடுகள் மற்றும் 26000 வணிக கடைகளில் நாள் ஒன்றுக்கு 470 டன் வரை உருவாகும் திடக்கழிவுகள் சேகரித்து நிர்ணயிக்கும் இடத்தில் சேர்க்கும் பணிகள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சியின் ஐந்து வார்டுகுழுவிற்க்குட்பட்ட 65 வார்டுகளில் உள்ள MCC மையங்களில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிகளை மேற்கொள்ளவும், RRC மையங்கள், BIO GAS PLANT மையங்கள், OCC மையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் பொது சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கும் இம்மாநகரட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சாக்கடைகள் சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் சாலைகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள தேவையான மனித ஆற்றல்களை வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் இரண்டு முறை பணி உத்தரவு நீட்டிப்பு செய்து பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிக்கான காலம் 18.09.2025ஆம் தேதியுடன் முடிவு பெறுவதை தொடர்ந்து பொது சுகாதார பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேவையான மனித ஆற்றல்களை புதிதாக வெளிக்கொணர்வு முறையில் நியமித்துக்கொள்ளவும், இப்பணியாளர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறை கடிதத்தில் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ரூ.650/– என்ற அடிப்படையில், (EPF. ESI மற்றும் நிர்வாக செலவினங்கள் உட்பட நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.769/– வீதம்) 90 தினங்களுக்கு கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ள உத்தேச செலவின தொகையில் இப்பணியினை மேற்கொள்ளவும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | உத்தேச செலவினம் ரூ(இலட்சம்) |
|---|---|---|
| 1 | **வார்டு குழு எண்-1** ற்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணியினை மேற்கொள்ள தேவையான 120 மனித ஆற்றல்களை 90 தினங்களுக்கு வழங்கும் பணி | 83.05 |
| 2 | **வார்டு குழு எண்-2** ற்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணியினை மேற்கொள்ள தேவையான தேவையான 120 மனித ஆற்றல்களை 90 தினங்களுக்கு வழங்கும் பணி | 83.05 |
| 3 | **வார்டு குழு எண்-3** ற்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணியினை மேற்கொள்ள தேவையான தேவையான 120 மனித ஆற்றல்களை 90 தினங்களுக்கு வழங்கும் பணி | 83.05 |
| 4 | **வார்டு குழு எண்-4** ற்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணியினை மேற்கொள்ள தேவையான தேவையான 140 மனித ஆற்றல்களை 90 தினங்களுக்கு வழங்கும் பணி | 96.89 |
| 5 | **வார்டு குழு எண்-5** ற்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பணியினை மேற்கொள்ள தேவையான தேவையான 130 மனித ஆற்றல்களை 90 தினங்களுக்கு வழங்கும் பணி | 89.97 |

**அலுவலக குறிப்பு:**

1. வரிசைஎண்.1 முதல் 5 வரையில் உள்ள இப்பணியினை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தினை 2025-2026 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட தலைப்பு எண் 2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்

**எச்1/ 8601/2024 (மையம்)**

**தீர்மானம் எண்: 607 பொருள்: 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - 2025-26ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 10 இருக்கைகள் கொண்ட (ஆண்கள்-5 மற்றும் பெண்கள்-5) நடமாடும் கழிப்பறை டிரெய்லர் (Mobile Toilet Trailer) - 2 எண்ணிக்கை மதிப்பீடு ரூ .22.22 இலட்சத்தில் புதிதாக வழங்கும் பணிக்கு ஆணையர் அவர்களால் 14.08.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட து. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.174/2025-26ன் வாயிலாக 29.08.2025ம் தேதி கோரியதில் , பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty | Estimate | | M/s. Onsite Rentals Services Private Limited, Tiruvallur | | M/s. Flush N Rush Private Limited, Tiruvallur | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 10 இருக்கைகள் கொண்ட (ஆண்கள்-5 மற்றும் பெண்கள்-5) நடமாடும் கழிப்பறை டிரெய்லர் (Mobile Toilet Trailer) – 2 எண்ணிக்கை புதிதாக வழங்கும் பணி | 2 Nos | 1110970 | 2221940 | 1083000 | 2166000 | 1155000 | 2310000 |
| | | | **2221940** | **2166000 (-2.52%)Less** | | **2310000 (+3.96%) more** | |
| **EMD** | 44500/- | | | State Bank of India Kattupakkam D.D No.605634 Rs. 44,500/- Date.28.08.2025 | | MSME Certificate for EMD Exemption | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.22,21,940ஐ காட்டிலும் -2.52% குறைவாக ரூ.**21,66,000/-**க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s.Onsite Rentals Services Private Limited, Tiruvallur** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பணியினை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கு ஆணையர் அவர்களால் 14.08.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – 2025–26ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 10 இருக்கைகள் கொண்ட (ஆண்கள்–5 மற்றும் பெண்கள்–5) நடமாடும் கழிப்பறை டிரெய்லர் (Mobile Toilet Trailer) – 2 எண்ணிக்கை புதிதாக வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் –2.52% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. Onsite Rentals Services Private Limited, Tiruvallur** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.21,66,000/–செலவில் பணியை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2025–26ம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**10854/2025/இ5(மையம்)**

**தீர்மானம் எண்: 608 பொருள்: 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை , அம்பேத்கார் நகர் (மண்டலம்–I), மணல்வாரித் துறை (மண்டலம்–2), நியு ராஜா காலனி (மண்டலம்–4), கோணக்கரை (மண்டலம்–5) ஆகிய 4 நுண் உர செயலாக்க மையங்களுக்கு தேவையான 4 எண்ணிக்கை 5 டன் திறன் கொண்ட எடைமேடை அமைத்து RFID Reader மற்றும் கேமராக்கள் பொருத்தி குப்பைகள் சேகரிக்கப்பட்ட வாகனங்கள் நுழைவு மற்றும் வெளியே செல்லும் நேரம், சேகரிக்கப்பட்ட குப்பைகளின் புகைப்படத்துடன் கூடிய எடை விபரங்கள் ஆகியவைகள் அனைத்தும் கணினி மற்றும் செல்போன் செயலி மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்துதல் பணிக்கு ரூ.22.66 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 04.08.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:173/2025–26, வாயிலாக 29.08.2025ம் தேதி கோரியதில் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty in Nos | Estimate | | M/s. Circularcarbon Technologies Private Limited, Chennai. | | M/s.Priyamina Audio Visuals, Chennai. | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| Supply and Erection of Smart Weighing System Capacity of 5 Tons – 4 Nos with IoT–Enabled Garbage Monitoring and reporting system and real time data collections with the following Components at Ambedkar Nagar MCC (Zone–1), Manalvarithurai MCC (Zone–2), New Raja Colony MCC (Zone–4), Konakarai MCC (Zone–5) to Tiruchirappalli City Corporation. (Including GST)<br>Components of the Project:<br>• Weigh bridge – 5 MT (2.75 Mtr x 3.75 Mtr)<br>•IoT Device –1 No<br>•Camera – 4 Nos<br>•RFID Reader – 1No<br>•RFID Tag each Vehicles<br>•Solar panel 12V/ 540W – 1No<br>•Battery –12V/65 Ah –1 No | 4 | 566400 | 2265600 | 565400 | 2261600 | 566250 | 2265000 |
| கூடுதல் | | | 2265600 | 2261600 (-0.18%)Less | | 2265000 (-0.03%) Less | |
| EMD | 45,500/- | | | HDFC Bank, D.D No.003493 Rs.45,500/- Date.28.08.2025 | | MSME Certificate for EMD Exemption | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.22,65,600/–ஐ காட்டிலும் –0.18% குறைவாக ரூ.**22,61,600**/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Circular carbon Technologies Private Limited, Chennai** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பனியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கு ஆணையர் அவர்களால் 04.08.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை , அம்பேத்கார் நகர் (மண்டலம்–I), மணல்வாரித் துறை (மண்டலம்–2), நியு ராஜா காலனி (மண்டலம்–4), கோணக்கரை (மண்டலம்–5) ஆகிய நுண் உர செயலாக்க மையங்களுக்கு தேவையான 4 எண்ணிக்கை 5 டன் திறன் கொண்ட எடைமேடை அமைத்து RFID Reader மற்றும் கேமராக்கள் பொருத்தி குப்பைகள் சேகரிக்கப்பட்ட வாகனங்கள் நுழைவு மற்றும் வெளியே செல்லும் நேரம், சேகரிக்கப்பட்ட குப்பைகளின் புகைப்படத்துடன் கூடிய எடை விபரங்கள் ஆகியவைகள் அனைத்தும் கணினி மற்றும் செல்போன் செயலி மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்துதல் பணிக்கு **M/s. Circularcarbon Technologies Private Limited, Chennai** நிறுவனம் மதிப்பீட்டு விலையை விட (–0.18%) குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ.22,61,600/–** ஐ ஏற்கலாம் என கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்ததை ஏற்று பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2025–2026ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு கணக்கு (வருவாய் நிதி) தலைப்பு எண் 2305301ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

**10741/2025/இ5(மையம்)**

**தீர்மானம் எண்: 609 பொருள்: 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மண்டலம்–3 பகுதிக்குட்பட்ட அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் 60 டன் திறன் கொண்ட எடைமேடை அமைத்து RFID Reader மற்றும் கேமராக்கள் பொருத்தி குப்பைகள் சேகரிக்கப்பட்ட வாகனங்கள் நுழைவு மற்றும் வெளியே செல்லும் நேரம், சேகரிக்கப்பட்ட குப்பைகளின் புகைப்படத்துடன் கூடிய எடை விபரங்கள் ஆகியவைகள் அனைத்தும் கணனி மற்றும் செல்போன் செயலி மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்துதல் பணிக்கு ரூ.29.99 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 04.08.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட து. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:172/2025–26, வாயிலாக 29.08.2025ம் தேதி கோரியதில் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty in Nos | Estimate | M/s. Circularcarbon Technologies Private Limited, Chennai. | M/s.Priyamina Audio Visuals, Chennai. |
|---|---|---|---|---|
| | | Rate | Rate | Rate |
| Supply and Erection of Weighing Bridge Capacity of 60 Tons – 1No with IoT–Enabled Garbage Monitoring and reporting system and real time data collections with the following Components at Ariyamangalam Compost yard (Zone–3) to Tiruchirappalli City Corporation. (Including GST)<br>Components of the Project:<br>• Weigh bridge – 60 MT (10 Mtr x 3 Mtr)<br>•IoT Device –1 No<br>•Camera – 5 Nos<br>•RFID Reader – 1No<br>•RFID Tag each Vehicles<br>•Solar panel 12V –540W– 4Nos<br>•Battery –12V/150 Ah –2Nos | 1 | **2998970** | **2997970** | **2998910** |
| **கூடுதல்** | | **2998970** | **2997970**<br>(-0.03%)Less | **2998910**<br>(-0.002%) Less |
| EMD | | 60,000/- | HDFC Bank,<br>D.D No.003492<br>Rs.60,000/-<br>Date.28.08.2025 | MSME Certificate for EMD Exemption |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.29,98,970/–ஐ காட்டிலும் –0.03% குறைவாக ரூ.**29,97,970**/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Circularcarbon Technologies Private Limited, Chennai** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பனியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கு ஆணையர் அவர்களால் 04.08.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மண்டலம்-3 பகுதிக்குட்பட்ட அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் 60 டன் திறன் கொண்ட எடைமேடை அமைத்து RFID Reader மற்றும் கேமராக்கள் பொருத்தி குப்பைகள் சேகரிக்கப்பட்ட வாகனங்கள் நுழைவு மற்றும் வெளியே செல்லும் நேரம், சேகரிக்கப்பட்ட குப்பைகளின் புகைப்படத்துடன் கூடிய எடை விபரங்கள் ஆகியவைகள் அனைத்தும் கணனி மற்றும் செல்போன் செயலி மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்துதல் பணிக்கு **M/s. Circularcarbon Technologies Private Limited, Chennai** நிறுவனம் மதிப்பீட்டு விலையை விட (-0.03%) குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ.29,97,970/-**ஐ ஏற்கலாம் என கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்ததை ஏற்று பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2025-2026ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு கணக்கு (வருவாய் நிதி) தலைப்பு எண் 2305301ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

10742/2025/இ5(மையம்)

**தீர்மானம் எண்: 610 பொருள்: 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - தினசரி அலுவலக கள ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான டயர்கள் மற்றும் டியூப்கள் 105 எண்ணிக்கை வழங்கும் பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள ஆணையர் அவர்களால் 30.07.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:164/2025-26, வாயிலாக 29.08.2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. NO | Description | Qty in Nos | Estimate Amount | | M/s. KBR. Tyres, Kumbakonam | | M/s.Balaji Tyres, Jayankondam | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) |
| | Supply and Delivery of New Tyres & tubes for Corporation Vehicles including GST and Transportation charges etc, complete. as directed by the Departmental Officers. | | | | | | | |
| 1 | 215/75/R15 - New Tyre & Tube (Bolero Jeep) | 51 | 14600 | 744600 | 14100 | 719100 | 14650 | 747150 |
| 2. | 165/D12 - New Tyre & Tube (LCV) | 54 | 6600 | 356400 | 6400 | 345600 | 6800 | 367200 |
| Total | | 105 | | 1101000 | | 1064700 (-3.30%)Less | | 1114350 (+1.21%) more |
| EMD Rs.22,100/- | | | | | State Bank of India, Karumandapam Trichy D.D.No. 321884, Rs.22100/- dt:26.08.2025 | | MSME Certificate for EMD Exemption | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.11,01,000/-ஐ காட்டிலும் -3.30% குறைவாக ரூ.**10,64,700/-**க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s.KBR. Tyres, Kumbakonam** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கு ஆணையர் அவர்களால் 30.07.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – தினசரி அலுவலக கள ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான டயர்கள் மற்றும் டியூப்கள் 105 எண்ணிக்கை வழங்கும் பணிக்கு **M/s.KBR Tyres, Kumbakonam** நிறுவனம் மதிப்பீட்டு விலையை விட (–3.30%) குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ.10,64,700/–** ஐ ஏற்கலாம் என சுூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்ததை ஏற்று பணியை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

3. மேற்கண்ட செலவினத்தை 2025–2026ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு கணக்கு (வருவாய் நிதி) தலைப்பு எண் 2305301ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

7466/2025/இ5(மையம்)

**தீர்மானம் எண்: 611 பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், கல்வி நிதி 2025–26ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண்.92, நாள்.16.06.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 119/2025–26ன் வாயிலாக 29.07.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிக் கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு – V, வார்டு எண்.26க்குட்பட்ட பகுதியில் செயல்பட்டுவரும் வண்ணாரப்பேட்டை மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கூடுதல் மேம்பாட்டு பணிகள், மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ. 23.70 இலட்சம். | 1. திரு. M. சுரேஷ், திருச்சி. **0.06%** குறைவு.<br><br>2. M/s. G.R and Sons., திருச்சி. **0.82%** கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M. சுரேஷ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்வதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் .92, நாள்.16.06.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 7283 / 2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 671 பொருள்: 72 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:73

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2025-26 ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டுகுழு அலுவலகம் 5 ன் தீர்மான எண். 13 நாள். 28.05.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 126/2025-26 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 24.07.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 10 க்குட்பட்ட காமாட்சி அம்மன் கோவில் தெருவில் Readymade RCC Box Culvert கொண்டு சிறுபாலம் கட்டும் பணி<br>**மதிப்பீடு ரூ.7.10 இலட்சம்** | 1. M/s. Karumary Construction, திருச்சி<br>0.10% குறைவு<br><br>2, திரு, ஜி,ஜி, சக்திவேல், திருச்சி<br>0.50% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Karumary Construction , திருச்சி நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டுகுழு அலுவலகம் 5 ன் தீர்மான எண். 13 நாள். 28.05.2025ல் இப்பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/ 8563/ 2024 ( மையம்)**

**தீர்மானம் எண்: 672 பொருள்: 73 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:74

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.01, வார்டு எண்.15க்குட்பட்ட பகுதியில் **பொதுநிதி 2025–26**ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.135/2025–26ன் வாயிலாக 25.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள். மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.15க்குட்பட்ட ஓயாமாரி இடுகாட்டில் அமைந்துள்ள எரிவாயு தகன மேடையில் (Gasifier) பழுதடைந்துள்ள பொருட்களை புதுப்பிக்கும் பணி (New Type Furnance refectory work, LPG Burners மற்றும் Burner Service works) **மதிப்பீடு.ரூ.49.80 இலட்சம்** | 1. **திரு.எம் பாபுராஜ், திருச்சி. 0.06 % குறைவு**<br><br>2. திரு. பி வேலுச்சாமி, திருச்சி 0.13 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எம் பாபுராஜ், திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06%** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

1. இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்.17.06.2025ல் பெறப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண் .4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/7143/2025 (மையம்))**

**தீர்மானம் எண்: 673 பொருள்: 74 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:75

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.02க்குட்பட்ட பகுதிகளில் **பொதுநிதி 2025–26**ன் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.91/2025–26ன் வாயிலாக 03.07.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டுக்குழு அலுவலகம் –2, வார்டு எண் 18க்குட்பட்ட இ.பி. ரோடு பகுதியில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார அலுவலகத்தில் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் மதிப்பீடு ரூ. 7.35 இலட்சம் இ3/ 959 /2025 (மையம்) | 1. மெசர்ஸ். அயல் கன்ஸ்ட்ரக்சன், திருச்சி. 0.09 % குறைவு<br><br>2. திரு டி. ராமநாதன், திருச்சி **0,28 % கூடுதல்**<br><br>3. **திரு டி. கார்த்திக், திருச்சி 0,14 % குறைவு** | வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு டி. கார்த்திக், திருச்சி** ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.14**% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண் 34க்குட்பட்ட ஜின்னா தெருவில் சேதமடைந்துள்ள குறுக்கு சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியனவற்றை திரும்ப கட்டும் பணி. **மதிப்பீடு ரூ. 11.30 இலட்சம் இ3/ 931 /2025 (மையம்)** | 1. திரு ஆர். மணிமாறன், திருச்சி. 0.05 % குறைவு<br><br>2. திரு கே. ராமசாமி, திருச்சி 0.72 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஆர். மணிமாறன், திருச்சி ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண் 49க்குட்பட்ட சங்கிலியாண்டபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் உள்ள இளநிலை பொறியாளர் பிரிவு அலுவலகம் பராமரிப்பு பணிகள் மற்றும் சுற்றுச் சுவர் உயர்த்தும் பணி<br>**மதிப்பீடு ரூ. 9.40 இலட்சம்**<br>**இ3/ 9503 /2025 (மையம்)** | 1. **மெசர்ஸ். ஜி.கே.கே இன்ப்ரா & அசோசியேட்ஸ், திருச்சி.**<br>**0.04 % குறைவு**<br>2. மெசர்ஸ். ஹரி கன்ஸ்ட்ரக்சன், திருச்சி<br>**0.04 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஜி.கே.கே இன்ப்ரா & அசோசியேட்ஸ் திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண் 47க்குட்பட்ட ஏரிக்கரை பகுதியில் உள்ள அமராவதி கூட்டுறவு நியாயவிலைக் கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் GI Sheet மூலம் Shed அமைக்கும் பணி<br>**மதிப்பீடு ரூ. 5.70 இலட்சம்**<br>**இ3/ 951 /2025 (மையம்)** | 1. **திரு டி. இளஞ்செழியன், திருச்சி.**<br>**0.15 % குறைவு**<br>2. மெசர்ஸ். ஜி.ஆர் & சன்ஸ், திருச்சி<br>**6.10 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு டி. இளஞ்செழியன், திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.15%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 5 | வார்டு எண் 30,31 மற்றும் 32க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சிமெண்ட் கான்கிரீட் தளத்தினை பேட்ச் மூலம் சீரமைக்கும் பணி<br>**மதிப்பீடு ரூ. 9.91 இலட்சம்**<br>**இ3/ 10390 /2024 (மையம்)** | 1. **திரு ஆர். மரிய பிரகாஷ் ராஜா, திருச்சி.**<br>**0.03 % குறைவு**<br>2. திரு எஸ். மாமுண்டி, திருச்சி<br>**0.40 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு ஆர். மரிய பிரகாஷ் ராஜா, திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.03%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 6 | வார்டு எண் 18க்குட்பட்ட விறகுப்பேட்டை அங்கன்வாடியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி<br>**மதிப்பீடு ரூ. 12.45 இலட்சம்**<br>**இ3/ 2352 /2025 (மையம்)** | 1. **மெசர்ஸ். ஜெயம் & கோ, திருச்சி.**<br>**0.06 % குறைவு**<br>2. திரு ஜி வெங்கடேஷ், திருச்சி<br>**1.58 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஜெயம் & கோ, திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 7 | வார்டு எண் 59க்குட்பட்ட மன்னார்புரம் நடுத்தெருவில் உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகாலினை இடித்துவிட்டு, திரும்ப கட்டும் பணி<br>**மதிப்பீடு ரூ. 12.70 இலட்சம்**<br>**இ3/ 962 /2025 (மையம்)** | 1. **மெசர்ஸ். ஸ்ரீ ஜே.டி. பில்டிர்ஸ், திருச்சி.**<br>**0.06 % குறைவு**<br>2. திரு எம். சுப்ரமணியன், திருச்சி<br>**1.05 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஸ்ரீ ஜே.டி. பில்டிர்ஸ், திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 8 | வார்டுக்குழு அலுவலகம் 2 அலுவலகத்திற்கு பாதுப்பு நலன் கருதி இரண்டு எண்ணிக்கை காவலர்களை சுழற்சி முறையில் பணியமர்த்துதல்.<br><br>**மதிப்பீடு ரூ. 12.40 இலட்சம்**<br>**இ3/ 4735 /2025 (மையம்)** | 1. **மெசர்ஸ். ஸ்ரீ ஸ்டார் செக்கியூரிட்டி ஃபோர்ஸ் கன்சர்வன்ஸி, திருச்சி.**<br>**0.04 % குறைவு**<br><br>2. மெசர்ஸ். விங்ஸ் செக்கியூரிட்டி சர்வீஸ், திருச்சி<br>**0.83 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஸ்ரீ ஸ்டார் செக்கியூரிட்டி ஃபோர்ஸ் கன்சர்வன்ஸி, திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 9 | வார்டு எண் 34க்குட்பட்ட அந்தோணியார் கோவில் தெரு மற்றும் தனமணி காலனி பகுதியில் உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகாலினை சீரமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ. 3.00 இலட்சம்**<br>**இ3/ 5074 /2025 (மையம்)** | 1. **திரு. கே. மோகன், திருச்சி.**<br>**0.05 % குறைவு**<br><br>2. திரு. சி. பட்டாபிராமன், திருச்சி<br>**1.07 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. கே. மோகன், திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 10 | வார்டு எண் 49 புதுக்கோட்டை சாலையில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்காலில் நேரிடையாக குப்பைகளை கொட்டுவதைத் தவிர்க்கும் பொருட்டு Weld Mesh Fencing அமைக்கும் பணி<br><br>**மதிப்பீடு ரூ. 2.15 இலட்சம்**<br>**இ3/ 5075 /2025 (மையம்)** | 1. **திரு. வி. தினேஷ்குமார், திருச்சி.**<br>**0.49 % குறைவு**<br><br>2. திரு. கே. கார்த்திக், திருச்சி<br>**0.42 % கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. வி. தினேஷ்குமார், திருச்சி** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.49%** குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைந்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

1. இப்பணிகளுக்கான மதிப்பீட்டிற்கு வார்டுக்குழு தீர்மானம் எண்கள் : 245,246, நாள்.28,04,2025 மற்றும் பணிக்குழுத் தீர்மாணம் எண்கள் : 34,36,37,38,39,40,60, நாள்.29.05.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண் .4ல் தெரிவிக்கப்பட்டு ள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ3/ 959 /2025 (மை))**

**தீர்மானம் எண்: 674 பொருள்: 75 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:76

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2025–26 ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .142/2025–26ன் வாயிலாக 06.08.2025 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.46க்குட்பட்ட அடைக்கலமாதா குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் மலையடிவாரம் பகுதியிர் சிறுபாலம் கட்டும் பணி<br><br>மதிப்பீடு ரூ.6.70 இலட்சம்<br>**இ7/ 6775 /2025(மையம்)** | 1.<br>திரு. R. செல்வக்குமார் 0.07% குறைவு<br><br>2.திரு. K. ஜெயராமன் 0.04 % குறைவு | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. R. செல்வக்குமார் திருச்சி அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்காலம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**<u>அலுவலகக்குறிப்பு</u>:** –

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு வார்டுகுழு தீர்மானம் எண் . 29 நாள்.27.06.2025ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/6775/2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 675 பொருள்: 76 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:77

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1 வார்டு எண் 1 முதல் 7 வரை உள்ள தினசரி சேகரமாகும் பாதாள சாக்கடை கழிவுநீர் வாசுதேவன் தெருவில் சேகரிக்கப்பட்டு காவிரி பழைய பாலத்தின் வழியே பஞ்சப்பூர் சுத்திகரிப்பு நிலையம் சென்றடைகிறது. இதில் பாலத்தில் செல்லும் RCC குழாய்கள் பதித்து 22 வருடங்கள் ஆனை நிலையில் குழாய் Joint இனைப்பு பகுதிகளிலும் குழாய் நடுவிலும் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் ஆற்றில் கலக்கும் நிலை எற்படுகிறது. இதனால் கழிவுநீர் குழாய் உடைப்பினை சரிசெய்யும் வரை தெருக்களில் உள்ள Manhole வழியே வெளியேறி சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட உடைப்பினை சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள ரூ. 6.35 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.06%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. Vishwa Infrastructures ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/5575/2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 676 பொருள்: 77 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:78**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.46க்குட்பட்ட அடைக்கலமாதா கோவில் தெரு, வார்டு எண்.45க்குட்பட்ட பிரிவு அலுவலகம் எதிரில் மற்றும் வார்டு எண்.44க்குட்பட்ட தங்கேஸ்வரி நகர் பகுதிகளில் செல்லும் 800 எம்.எம் DI குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சரிசெய்ய மதிப்பீடு ரூ.2.65 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 7945/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 677 பொருள்: 78 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:79**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண் 1க்குட்பட்ட ஸ்ரீரங்கம் மேலூர் ரோடு சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் அருகே உள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரிப்பு தொட்டிக்கு செல்லும் 300 எம் எம் PSC குழாய் சேதமடைந்து, கழிவுநீர் வெளியேறி சாலையில் பள்ளம் ஏற்பட்டுள்ளது. மேற்படி சாலையானது பேருந்துகள் செல்லும் முக்கிய சாலை என்பதனால் சேதமடைந்த குழாயினை அகற்றிவிட்டு புதிய குழாயினை உடனடியாக மாற்றி பதிக்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 3.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.02%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **திரு. எம். பாபுராஜ், திருச்சி** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/7754/2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 678 பொருள்: 79 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:80**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.60க்குட்பட்ட காஜாமலை காலனி பகுதியில் நகராட்சி நிருவாக துறை அமைச்சர் அவர்களது தலைமையில் 17.05.2025 அன்று நடைபெற்ற வீட்டுமனை பட்டா வழங்கும் அரசு விழாவிற்கு சாமியானா பந்தல், மேடை அமைத்தல், மேசை, நாற்காலிகள் வழங்குதல், மின் இணைப்பு மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கும் பணியினை மதிப்பீடு ரூ.5.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.29%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.K.அரவிந்த், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/5800/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 679 பொருள்: 80 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்:81**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.46க்குட்பட்ட கொட்டப்பட்டு அம்பாள் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் பதித்து, ஐஸ்வர்யா நகர் நீர்தேக்க தொட்டியிலிருந்து 90 எம்.எம் விட்டமுளள புதிதாக பிவிசி குழாய் பதித்தல் மற்றும் மலையப்ப நகர் பகுதியி குடிநீர் விநியோக குழாய் மாற்றியமைக்கும் பணிகளை குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 7946/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 680 பொருள்: 81 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:82

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண்.49க்குட்பட்ட சங்கிலியாண்டபுரம் MGR நகர் IOC குடோன் அருகில் 600 எம்.எம் விட்டமுள்ள MS குடிநீர் பிரதான உந்துக்குழாயில் உடைப்பு ஏற்பட்டு பெருமளவு குடிநீர் வீணாக செல்கிறது.

மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி நிரம்பாமல் அழுத்தம் குறைவாக குடிநீர் விநியோகிப்பதால், பொதுமக்களுக்கு சீரான அளவில் குடிநீர் வழங்க இயலவில்லை. மேலும் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், பழுதடைந்த வால்வுகளை சரிசெய்யவும், PLC யூனிட் பொருத்திடவும், மதிப்பீடு ரூ.2.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.விஸ்வா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/7944/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 681 பொருள்: 82 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:83

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.62க்குட்பட்ட ராமசந்திரா நகர் பகுதியில் மாண்புமிகு நகராட்சி நிருவாக துறை அமைச்சர் அவர்களது தலைமையில் 16.05.2025 அன்று நடைபெற்ற வீட்டுமனை பட்டா வழங்கும் அரசு விழாவிற்கு சாமியானா பந்தல், மேடை அமைத்தல், மேஜை, நாற்காலிகள் வழங்குதல், மின் இணைப்பு மற்றும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் பணியினை மதிப்பீடு ரூ.6.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.21%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/5793/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 682 பொருள்: 83 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:84

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 11க்குட்பட்ட சாலை ரோட்டில் (தில்லைநகர் நுழைவு முதல் கோகினூர் சிக்னல் வரை) உள்ள மைய தடுப்புச்சுவர் மற்றும் பாதசாரிகள் நடைபாதை சுவரின் வெளிபுறத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள 08.05.2025 அன்று திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிந்ததை தொடர்ந்து மேற்படி பகுதியில் உள்ள மைய தடுப்புச்சுவர் மற்றும் பாதசாரிகள் நடைபாதை சுவர்களின் வெளிபுறத்தில் வர்ணம் பூசும் பணியினை மேற்கொள்ள ரூ. 1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.22%** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **திரு.சி.சுப்ரமணியன், திருச்சி** ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**இ6/5721/2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 683 பொருள்: 84 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:85

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.56, 57, 58க்குட்பட்ட 110 எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாய், 90 எம்.எம் விட்டமுள்ள பிவிசி குழாய், 100 எம்.எம் விட்டமுள்ள AC குழாய் மற்றும் 200 எம்.எம் விட்டமுள்ள CI மெயின் குழாய் ஆகியவற்றில் 38 இடங்களில் குடிநீர் கசிவுகள் ஏற்பட்டதால், குடிநீர் வழங்குவதில் சிரமத்தை தவிர்க்கவும், contamination ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் மெயின் குழாயினை மாற்றியமைப்பதற்கு மதிப்பீடு ரூ.4.45 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **மெசர்ஸ்.ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6447/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 684 பொருள்: 85 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:86

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு–1, வார்டுஎண்.05க்குட்பட்ட மேல உள் வீதி மற்றும் 4 கோவில் சுற்று பிரகாரத்தில் 30.03.2025 அன்று தேர் வீதி உலா நடைபெற்றதைத் தொடர்ந்து, தேர் வழித்தடத்தில் உள்ள பள்ளங்களில் Wet Mix Gravel கொண்டு நிரப்பும் பணியினை மேற்கொள்ள **மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு,** இப்பணியின் அவசர அவசியம் கருதி, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.03%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.எம்.பாபுராஜ், திருச்சிராப்பள்ளி** ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ8/ 4834 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 685 பொருள்: 86 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:87

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு–1, வார்டு எண்.12 மற்றும் 15க்குட்பட்ட தில்லைநாயகம் படித்துறை, ஓடத்துறை படித்துறை, அய்யாளம்மன் கோவில் படித்துறை, சுப்ரமணிய சுவாமி கோவில் படித்துறை மற்றும் காந்தி படித்துறை ஆகிய காவேரி கரை படித்துறைகளில் ஆடிப் பெருக்கு விழாவினை முன்னிட்டு 03.08.2025ஆம் தேதியன்று தற்காலிக பாதுகாப்பு தடுப்பான்கள் அமைத்தல், மின் விளக்குகள் பொருத்துதல் மற்றும் சாமியானா பந்தல்கள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள **மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு,** இப்பணியின் அவசர அவசியம் கருதி, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.55%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.எஸ்.கோவிந்தராஜ், திருச்சிராப்பள்ளி** ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ8/ 9934 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 686 பொருள்: 87 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:88

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.58க்குட்பட்ட மங்கம்மாள் சாலை (Part 2) பகுதியில் நகராட்சி நிருவாக துறை அமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்ற வீட்டுமனை பட்டா வழங்கும் அரசு விழாவிற்கு சாமியானா பந்தல், மேடை அமைத்தல், மேசை, நாற்காலிகள் வழங்குதல், மின் இணைப்பு மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கும் பணியினை மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.21%,** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.G.G.சக்திவேல், திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/7215/2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 687 பொருள்: 88 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:89

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம்.1, வார்டுஎண்.12க்குட்பட்ட தேசிய கல்லூரி மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் கடந்த 06.07.2025 அன்று "பள்ளிக் கல்வித் துறையின் முப்பெரும் விழா" நடைபெற்றதால் தற்காலிகமாக பதாகைகள் அமைத்தல், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள **மதிப்பீடு ரூ.3.65 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு,** இப்பணியின் அவசர அவசியம் கருதி, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.31%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த திரு.S.பெரியசாமி, திருச்சிராப்பள்ளி ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ8/ 8914 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 688 பொருள்: 89 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:90

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம்.1, வார்டுஎண்.13க்குட்பட்ட வென்னிஸ் தெரு புதைவடிகால் உந்து நிலையத்தின் உட்பகுதியில் பழுதடைந்துள்ள Stoneware குழாய்களை மாற்றி UPVC குழாய் பதிக்கும் பணியினை மேற்கொள்ள **மதிப்பீடு ரூ.3.70 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு,** இப்பணியின் அவசர அவசியம் கருதி, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த திரு.S.பெரியசாமி, **திருச்சிராப்பள்ளி** ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ8/ 8715 /2025 / மையம்)**

**தீர்மானம் எண்: 689 பொருள்: 90 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:91

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு மாநகராட்சி பொறுப்பில் எடுக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் – 1 எண், தலைமை கழிவுநீர் உந்து நிலையங்கள் – 2 எண்கள் , துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் – 26 எண்கள் மற்றும் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்கள் – 27 எண்கள் ஆகிய 56 எண்கள் கழிவு நீர் உந்து நிலையங்கள் தற்போது தனியார் நிறுவனம் மூலம் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி கழிநீர் உந்து நிலையங்களின் பராமரிப்பு காலம் 31.12.2023 அன்றோடு முடிவடைந்து விட்டது. எனவே மேற்படி கழிவு நீர் உந்து நிலையங்களை தொடர்ந்து தனியார் நிறுவனம் மூலம் இயக்கி பராமரிக்க வேண்டியிருந்ததால், இப்பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது

**அட்டவணை (1)**

| வ. எண் | பணியின் விபரம் | கழிவு நீர் உந்து நிலையங்கள் எண்ணிக்கை | ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ஓராண்டுக்கு ரூ. இலட்சத்தில் (2023–24) | திருத்திய மதிப்பீடு ஓராண்டுக்கு ரூ. இலட்சத்தில் (2024–25) |
|---|---|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் I–க்குட்பட்ட 13 எண்கள் துணை கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் 23 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/ 9722 /2023/மையம்** | 36 எண்கள் | ரூ.210.00 | ரூ.230.00 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் –II–க்குப்பட்ட தலைமை கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண், துணை கழிவு நீர் உந்து நிலையம்– 5 எண்கள் மற்றும் சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண்கள் ஆகியவற்றை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/9723/2023/மையம்** | 7 எண்கள் | ரூ.70.00 | ரூ.76.00 |
| 3. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் –IV–க்குப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் – 01 எண், தலைமை கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண், துணை கழிவு நீர் உந்து நிலையம்– 3 எண்கள் மற்றும் சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் – 01 எண்கள் ஆகியவற்றை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/9724/2023/மையம்** | 6 எண்கள் | ரூ.65.00 | ரூ.66.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் V–க்குட்பட்ட 5 எண்கள் துணை கழிவு நீர் உந்து நிலையம் மற்றும் 2 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனியார் வசம் ஒப்படைத்து ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/9725/2023/மையம்** | 7 எண்கள் | ரூ.60.00 | ரூ.65.00 |
| | **மொத்தம்** | **56 எண்கள்** | | |

மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ள விபரப்படி மதிப்பீடுகளுக்கு மாமன்ற தீர்மானம் எண். 696 நாள். 03.10.2023 ன் படி நிர்வாக அனுமதி கோரி 17.10.2023ல் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு. நிர்வாக அனுமதி பெறப்படாத நிலையில் 15.07.2024 மற்றும் 06.01.2025 ல் மீண்டும் நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இப்பொருள் மீது நிர்வாக அனுமதி வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் பரீசிலினையில் உள்ள நிலையில், மேற்படி கழிவு நீர் உந்து நிலையங்களை தொடர்ந்து இயக்கி பராமரிக்க வேண்டியுள்ள அவசர அவசியம் கருதி, மாமன்ற தீர்மானம் எண். 137 நாள். 28.03.2025 ன் படி மேற்படி கழிவு நீர் உந்து நிலையங்களை இயக்கி, பராமரிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, முடிவு செய்து, தேர்வு செய்யப்படும் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் வரை தற்போது இயக்கி பராமரித்து வரும் தனியார் நிறுவனங்களின் மூலம் தற்போதைய பராமரிப்பு தொகையிலேயே மாற்றம் ஏதும் இன்றி தொடர்ந்து இயக்கி பராமரிக்க ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டு 30.09.2025ல் இதன் நீட்டிப்பு காலம் முடிவடைய உள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறப்படாத நிலையில் தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ள அவசர அவசியம் கருதி 01.10.2025 முதல் 31.03.2026 வரை மேலும் ஆறு மாத காலங்களுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவேண்டியுள்ளது அதன் படி இப்பணிகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யபட உள்ள காலத்திற்குண்டான செலவின விவரம் கீழ்கண்டவாறு மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அட்டவணை (2)**

| வ. எண் | பணியின் விபரம் | 01.10.2025 முதல் 31.03.2026 வரை 6 மாதங்களுக்கு செலவினத் தொகை விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | Pumping station | Rate Per Month (Rs) | Extension Period | Total Amount (Rs) |
| 1. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் I–க்குட்பட்ட 3 எண்கள் உயர் மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள், மற்றும் 10 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/5834/2020/மையம்** | **3 HT** | **77985** | **6 month** | **1403730** |
| | | **10 LT** | **45133** | **6 month** | **2707980** |
| | **மொத்தம்** | | | | **4111710** |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் I–க்குட்பட்ட 23 எண்கள் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/5838 2020/மையம்** | 23 Lifting | 19420 | 6 **month** | 2679960 |
| | **மொத்தம்** | | | | **2679960** |
| 3. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் II–க்குட்பட்ட 2 எண்கள் உயர் மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள், 2 எண்கள் குறைந்த மின்னழுத்த மற்றும் 1 எண் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/5836/2020/மையம்** | **2 HT** | 77985 | 6 **month** | 935820 |
| | | **2 LT** | 45133 | **6 month** | **541596** |
| | | **1 Lifting** | **19420** | **6 month** | **116520** |
| | **மொத்தம்** | | | | **1593936** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் IV–க்குட்பட்ட 3 எண்கள் உயர் மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள், 3 எண்கள் குறைந்த மின்னழுத்த மற்றும் 1 எண் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/5837/2020/மையம்** | 3 HT | 77972 | 6 **month** | 1403496 |
| | | **3 LT** | 45157 | **6 month** | **812826** |
| | | **1 Lifting** | 19408 | **6 month** | **116448** |
| | **மொத்தம்** | | | | **2332770** |
| 5 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டு குழு அலுவலகம் V–க்குட்பட்ட 2 எண்கள் உயர் மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள், 3 எண்கள் குறைந்த மின்னழுத்த மற்றும் 2 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணி. **இ6/5835/2020/மையம்** | 2 HT | 77972 | 6 **month** | 935664 |
| | | 3 LT | 45157 | 6 **month** | 812826 |
| | | 2 Lifting | 19408 | 6 **month** | 232896 |
| | **மொத்தம்** | | | | **1981386** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி கழிவுநீர் உந்து பணியின் அவசர அவசியம் கருதி அட்டவணை வரிசை எண் 1,2, மற்றும் 3 ல் காணும் பணிகளை மேற்கொண்டு வரும் மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி நிறுவனம் மற்றும் வரிசை எண் 4 மற்றும் 5ல் காணும் பணிகளை மேற்கொண்டு வரும் மெசர்ஸ். பவர் எலட்ரிக்கல் ஒர்க்ஸ் திருச்சி நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் மேலும் ஆறு மாத காலங்களுக்கு தற்போதைய பராமரிப்பு தொகையிலேயே இயக்கி பராமரிக்க ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளன.

எனவே அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கும் 01.10.2025 முதல் 31.03.2026 வரை ஆறு மாதங்களுக்கு மூன்றாம் ஆண்டு பராமரிப்பு தொகையிலேயே தொடர்ந்து இயக்கி பராமரிக்க ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட அட்டவணை எண் (2) ல் வரிசை எண் 01 முதல் 05 வரையில் காணும் பணிகளுக்கு 01.10.2025 முதல் 31.03.2026 வரை ஆறு மாத காலங்களுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்யும் வரை அல்லது 31.03.2026 வரை இதில் எது முதல் நிகழ்வோ, அது வரை தொடர்ந்து தற்பொழுது பராமரித்து வரும் தனியார் நிறுவனங்களே அதை விலையில் தொடர்ந்து பராமரித்து வர அனுமதி அளிக்கலாம்.
3. இச்செலவினத்தை 2025–26 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கணக்கு தலைப்பு எண்:230–50–10–ல் கழிவு நீர் அகற்றல் மற்றும் பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்..

**(இ6/5834/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 690 பொருள்: 91 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:92

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – I, வார்டு எண்.3க்குட்பட்ட காந்தி ரோட்டில் இராஜகோபுரம் முதல் வடக்கு தேவி தெரு முடிய உள்ள மழைநீர் வடிகாலின் பக்கச்சுவர்கள் சேதமடைந்துள்ளால், மழைநீர் வெளியேற வழியில்லாமல் சாலைகளில் தேங்கி, போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதோடு, சுகாதார சீர்கேடும் ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும், காந்தி ரோடு பகுதியில் ஸ்ரீரங்கம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதால் அதன் ஒரு பகுதியின் மழைநீரும் மேற்படி வடிகால் வழியாக வெளியேற ஏதுவாக இப்பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலினை மறுகட்டமைப்பு செய்வது அவசியமாகிறது. எனவே, வார்டு எண்.3க்குட்பட்ட காந்தி ரோட்டில் இராஜகோபுரம் முதல் வடக்கு தேவி தெரு முடிய உள்ள மழைநீர் வடிகாலினை மறுகட்டடைப்பு செய்து குறுக்குப் பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.52.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு;

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ . 52.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2025-2026 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பொது நிதியில் மழைநீர் வடிகால் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் (4103101-1) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ .3250.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம்.

**இ8 / 11897 / 2025(மையம்)**

**தீர்மானம் எண்: 691 பொருள்: 92 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:93

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு-I, வார்டு எண்.19க்குட்பட்ட பெரிய கடை வீதி, பூக்குளம் பூங்காவில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. ஜெ. நாகராஜ், ஒப்பந்ததாரருக்கு 05.02.2025 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்ட நிலையில், மேற்படி இடமானது, அருள்மிகு அங்காளம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமானது என்றும், அவ்விடத்தில் குளம் இருந்ததாகவும், மேற்படி குளம் மாநகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மூடப்பட்டதாகவும் செயல் அலுவலரின் 28.04.2025 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், செயல் அலுவலர் அளித்துள்ள நில அளவை ஆவணத்தில் மேற்படி குளம் சர்க்கார் புறம்போக்கு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இத்தனை ஆண்டுகளாக மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. செயல்அலுவலர் குறிப்பிடும்படி, மேற்படி இடத்தில் குளம் இருந்ததற்காகவும், மாநகராட்சியால் குளம் மூடப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டதற்கு, எவ்வித அடிப்படை ஆதாரங்களும் இல்லை.

இந்நிலையில், மேற்படி இடத்தில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு தடை கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) No. 13638/2025;ல் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. எனவே, வார்டு எண்.19க்குட்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை பெரிய கடை வீதி, பூக்குளம் பூங்காவில் கட்டுவதற்கு மாற்றாக, பெரிய கடை வீதி, கள்ளத் தெரு, திரவியம் பிள்ளை பூங்காவில், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே ஒப்பந்தப்புள்ளி தொகையில் திரு.ஜெ, நாகராஜ், ஒப்பந்ததாரர் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

வார்டு எண்.19க்குட்பட்ட பல்நோக்கு கட்டிடத்தை பெரிய கடை வீதி, பூக்குளம் பூங்காவில் கட்டுவதற்கு மாற்றாக, பெரிய கடை வீதி, கள்ளத் தெரு, திரவியம் பிள்ளை பூங்காவில், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே ஒப்பந்தப்புள்ளி தொகையில் திரு.ஜெ, நாகராஜ் மூலம் கட்டுவதற்கு அனுமதிக்கலாம்.

**1269/2024/இ8(மையம்)**

**தீர்மானம் எண்: 692 பொருள்: 93 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:94

திருச்சிராப்பள்ளி வட்டார அலுவலர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வட்டார் அலுவலகம் வெளியீட்டு பிரிவு சார்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அறிவுசார் மையத்தில் (குதுப்பாளையம்) டான்சி நிறுவனத்தின் மூலம் விற்பனை மையங்கள் (Sales Kiosk) அமைப்பதற்கு இலவசமாக இடம் தேவைபடுவதால் அனுமதி வழங்குமாறு கோரியுள்ளதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 4 அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் நகஎண் எப்1210.2025 நாள் 04042025 கடிதத்தில் Kiosk விற்பனை மையம் அமைக்க இலவசமாக இடத்தினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு வழங்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் ஸ்ரீபுரத்தில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் மாமன்ற சாதாரணக் கூட்டத் தீர்மானம் எண். 15 24.04.2025ன்படி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கடிதம் வெளியீட்டு பிரிவு சார்பாக விற்பனை நிலையம் (Sales Kiosk) அமைப்பதற்கு இலவசமாக 12x10=120 சதுர அடி பரப்பளவு இடத்தினை ஒதுக்கீடு செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சியைப் போல திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக்குழு அலுவலகம் IVல் அமைந்துள்ள குதுப்பாப்பள்ளம் பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மையத்திற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு வாடகை ஏதுமின்றி 12x10=120 சதுரடி பரப்பளவு இடத்தினை பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவகைக்குறிப்பு**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக்குழு IVல் அமைந்துள்ள குதுப்பாப்பள்ளத்தில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் 12x10=120 சதுரடி பரப்பளவு இடத்தினை இலவசமாக வழங்க அனுமதி வழங்கலாம்.

**எப்1 (2113/2025(மண்டலம் 4)**

**தீர்மானம் எண்: 693 பொருள்: 94 வாடகை எதுமின்றி 12x10=120 ச.அடி இடத்தின பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.**

## பொருள்:95

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.53க்குட்பட்ட பாரதிதாசன் சாலை குறுக்கு சாலை, மாவட்டத்தின் பிரதான பகுதியாக அமைவதால், திட்ட செயலாக்க அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி மாமன்றப் பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.53க்குட்பட்ட பாரதிதாசன் சாலை குறுக்கு சாலையில் திட்ட செயலாக்க அலுவலக கட்டிடம் கட்டும் பணி (பகுதி 1) **இ4/12430/2025/மையம்** | 59.55 |
| 2. | வார்டு எண்.53க்குட்பட்ட பாரதிதாசன் சாலை குறுக்கு சாலையில் திட்ட செயலாக்க அலுவலக கட்டிடம் கட்டும் பணி (பகுதி 2) **இ4/12431/2025/மையம்** | 59.75 |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை 2025–26ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் கீழ் (**4102001–9) மாநகராட்சி கட்டிடங்கள்** என்ற தலைப்பின் கீழ் செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/12431/2025/மையம்**

**தீர்மானம் எண்: 694 பொருள்: 95 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:96

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.54க்குட்பட்ட உய்யக்கொண்டான் வாய்க்காலில் ராஜா காலனி பகுதியில் வாகனங்கள் செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணியினை ரூ.125.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு, ந.க.எண்.40454/2023/COA2, நாள்.11.03.2024ல் மற்றும் மாமன்ற தீர்மான எண்.400, நாள்.24.07.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர், அவர்களது ந.க.எண்.18484/2023/D01, நாள்.27.08.2024ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 05.11.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ்.ஸ்ரீஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தாருக்கு 23.01.2025 பணி உத்தரவு வழங்கப்பட்டு, 16.05.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டது.

இப்பாலம் உய்யங்கொண்டான் வாய்க்காலின் நடுவில் தூண் மற்றும் இரண்டு பக்கங்களிலும், இரண்டு தாங்கு சுவர் கட்டுதல் என வடிவமைப்புடன் பணிகள் துவங்கப்பட்ட நிலையில், அடிக்கல் நாட்டும் பொழுது மாண்புமிகு நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் உய்யக்கொண்டான் வாய்க்காலில் நடுவில் தூண் அமைத்து தண்ணீரின் ஓட்டத்தை தேக்காது, 20 மீட்டர் நீளத்திற்கு, தாங்கு சுவரிலேயே நிற்கும் வகையில் பாலத்தினை வடிவமைக்க அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து, மீண்டும் மண் பரிசோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகளின் அடிப்படையில் 20 மீ நீளத்திற்கு புதிதாக (20x7M) RCC பாலம் அமைக்கும் வகையில் வடிவமைப்பு செய்து தர தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டதில், இருமுறை ஆய்வு செய்த பின், தற்பொழுது வடிவமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தற்போது வருடாந்திர பாசனத்திற்காக ஜீன் 12 முதல் உய்யக்கொண்டான் வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு, ஜனவரி 2026 வரை வாய்க்கால் முழுவதும் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

இந்நிலையில், ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஸ்ரீஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தார் தனது 02.09.2025ந் தேதிய கடிதத்தில், ஜனவரி 2026 வரை பாசனத்திற்காக உய்யக்கொண்டான் வாய்க்காலில் தண்ணீர் செல்வதாலும், 2024 வருடத்திய விலை விகிதம் என்பதாலும், பாலத்தினை வடிவமைப்பு திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளதால், ஒப்பந்த விலையில் இப்பணியினை மேற்கொள்ள இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே, உய்யக்கொண்டான் வாய்க்காலில் ராஜா காலனி பகுதியில் வாகனங்கள் செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணிக்கு திருத்திய வடிவமைப்பு பெற்று, 2025–26ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல்படி, திருத்திய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும், இப்பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ்.ஸ்ரீஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தாரது ஒப்பந்தப்புள்ளி மற்றும் பணி உத்தரவை ரத்து செய்யவும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. உய்யக்கொண்டான் வாய்க்காலில் ராஜா காலனி பகுதியில் வாகனங்கள் செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணிக்கு திருத்திய வடிவமைப்பு பெற்று , 2025–26ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல்படி , திருத்திய மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ் .ஸ்ரீஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன்ஸ் , திருச்சி நிறுவனத்தாரது ஒப்பந்தப்புள்ளி மற்றும் பணி உத்தரவை ரத்து செய்யவும் , அந்நிறுவனம் செலுத்திய வைப்பு தொகைகளை திரும்ப வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/4299/2024 (மையம்)**

**தீர்மானம் எண்: 695 பொருள்: 96 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:97

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2025–26ன் கீழ், அட்டவணையில் கண்டுள்ள பணி யினை மேற்கொள்வதற்கு பணிக்குழு தீர்மானம் எண் . 41, நாள்.29.05.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து , இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 103/2025–26ன் வாயிலாக 11.07.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் , கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை , ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு – I, வார்டு எண் .14 மற்றும் 19க்குட்பட்ட கள்ளர் தெரு மற்றும் பெரிய கடை வீதிகளிலுள்ள தார் சாலைகளை சீரமைத்தல் (Patch Work ) பாபு தெரு, திப்பிரான்தொட்டித் தெரு மற்றும் மேலபுலிவார்டு ரோடு ஆகிய சாலைகளில் வேகத்தடை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.<br>**மதிப்பீடு ரூ. 5.50 இலட்சம்.** | 1. மெசர்ஸ். ஸ்ரீ ஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன், திருச்சி. 0.08% குறைவு.<br>2. மெசர்ஸ். ஆர்.வி. கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி. 2.99% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் மெசர்ஸ். ஸ்ரீ ஆண்டாள் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) பணிக்குழு தீர்மானம் எண் . 41, நாள்.29.05.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 841 / 2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 696 பொருள்: 97 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:98

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில், பொது நிதி 2025–26ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண்.34, நாள்.29.05.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 107/2025–26ன் வாயிலாக 11.07.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் – I, வார்டு எண்.13க்குட்பட்ட மலைக்கோட்டை தாயுமானவர் தெரு கழிப்பிடம் வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி.<br>மதிப்பீடு ரூ. 47.20 இலட்சம். | 1. திரு.S.கோவிந்தராஜ் திருச்சி. 0.09% குறைவு.<br>2. திரு.T. இளஞ்செழியன், திருச்சி. 0.09% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.S.கோவிந்தராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

1) மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண் .34, நாள்.29.05.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 6459 / 2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 697 பொருள்: 98 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:99

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2025-26ன் கீழ், இப்பணியினை மேற்கொள்ள வார்டுகுழு அலுவலகம் V ன் தீர்மான எண். 75 நாள். 24.03.2025ல் பெறப்பட்டுள்ள நிர்வாக அனுமதியினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 45/2025-26 ன் வாயிலாக கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 10.06.2025 அன்று பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீது, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எ ண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் ஒப்பந்தக்காரரின் பெயர் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 22க்குட்பட்ட வாமடம் உடற்பயிற்சி கூடத்தில் கூடுதல் அறை கட்டும் பணி<br>**மதிப்பீடு ரூ.5.80 இலட்சம்** | 1. M/s. RTD Infra. திருச்சி 0.06% குறைவு<br>2, M/s. Nachiyar Constructions, திருச்சி 0.29% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s. RTD Infra திருச்சி** நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. வார்டுகுழு அலுவலகம் V ன் தீர்மான எண். 75 நாள். 24.03.2025ல் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் .4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**இ6/1345 /2025 ( மையம்)**

**தீர்மானம் எண்: 698 பொருள்: 99 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:100

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் – 4, வார்டு எண். 62க்குட்பட்ட பஞ்சப்பூர் கனரக சரக்கு வாகன முனையத்தில் கீழ்கண்டவாறு தரைத்தளத்தில் 51 கடைகளும் மற்றும் முதல் தளத்தில் 28 கடைகளும், ஆக மொத்தம் 79 அமைந்துள்ளது.

| வ. எண் | கடைகளின் விபரம் | கடைகள் / அலுவலகம் எண்ணிக்கை | கடைகள் / அலுவலகம் அளவு | குத்தகைக்கான வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | தரைத்தளம் கடை எண். 24,25,26 மற்றும் 51 (மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும்) | 4 | 250 சதுர அடி வரை | ரூ.4,00,000 |
| 2 | தரைத்தளம் கடை எண். 1 முதல் 9 வரை<br>தரைத்தளம் கடை எண். 11 முதல் 17 வரை<br>தரைத்தளம் கடை எண். 19 முதல் 23 வரை<br>தரைத்தளம் கடை எண். 27 முதல் 35 வரை<br>தரைத்தளம் கடை எண். 37 முதல் 50 வரை<br>முதல் தளம் கடை எண். 3,4,22,23,25 மற்றும் 26 (அலுவலக பயன்பாட்டிற்கு) | 50 | 251 முதல் 500 சதுர அடி வரை | ரூ.7,00,000 |
| 3 | தரைத்தளம் கடை எண். 10, 18 மற்றும் 36<br>முதல் தளம் கடை எண். 1 முதல் 2 வரை<br>முதல் தளம் கடை எண். 5 முதல் 7 வரை<br>முதல் தளம் கடை எண். 9 முதல் 10 வரை<br>முதல் தளம் கடை எண். 19 முதல் 20 வரை<br>முதல் தளம் கடை எண். 24, 27 மற்றும்28 (முதல் தளம் அனைத்தும் அலுவலக பயன்பாட்டிற்கு) | 15 | 501 முதல் 1000 சதுர அடி வரை | ரூ.8,00,000 |
| 4 | முதல் தளம் கடை எண். 8, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 மற்றும் 21 (அலுவலக பயன்பாட்டிற்கு) | 10 | 1001 சதுர அடிக்கு மேல் | ரூ.10,00,000 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள கடைகள் மற்றும் அலுவலக பயன்பாடு கடைகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அரசு வழிகாட்டு பதிவேடு மதிப்பின் படி சதுர அடி ஒன்றிற்கு ரூ.132/– என நிர்ணயம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்கண்ட 79 கடைகள் மற்றும் அலுவலக பயன்பாட்டு கடைகளுக்கு இரண்டு முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியதால் மூன்றாம் முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். 1814/2025/அ1(ம.4), நாள். 01.08.2025ன் வாயிலாக 21.08.2025 அன்று மூன்றாம் அழைப்பு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு செய்யப்பட்டது.

அதன் படி கீழ்கண்டவாறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. விவரம் பின்வருமாறு

| வ. எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி | கடை எண் / சதுரடி விபரம் | சதுரடிக்கு ரூ.132/– என கணக்கிடப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | ஏலம் / ஒப்பந்தப் புள்ளி கேட்கப் பட்ட தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | S.சகாய கிருட்டனா | ஏலம் | 31 (469.84) | 62019 | 76100 | கடை எண். 31க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் **திருமதி. சகாயகிருட்டனா** என்பவர் ஏலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட **ரூ.76100** மாத வாடகையாக அதிகபட்ச ஏல கேள்வித் தொகை கோரியுள்ளார். |
| 2 | B.கவியரசன் | ஒப்பந்தப்புள்ளி | 31 (469.84) | 62019 | 62500 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | Y.பத்மாவதி | ஏலம் | 32 (466.37) | 61561 | 63000 | கடை எண். 32க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் **திருமதி.பத்மாவதி** என்பவர் ஏலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட **ரூ.63000** மாத வாடகையாக அதிகபட்ச ஏல கேள்வித் தொகை கோரியுள்ளார். |
| 4 | T.சத்தியராஜ் | ஒப்பந்தப்புள்ளி | 32 (466.37) | 61561 | 61900 | |
| 5 | S.ராஜா மணிகண்டன் | ஏலம் | 34 (469.33) | 61952 | 77700 | கடை எண். 34க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் **திரு.ராஜாமணிகண்டன்** என்பவர் ஏலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட **ரூ.77700** மாத வாடகையாக அதிகபட்ச ஏல கேள்வித் தொகை கோரியுள்ளார். |
| 6 | K.அம்பிகா | ஒப்பந்தப்புள்ளி | 34 (469.33) | 61952 | 62300 | |
| 7 | V.P.ஜுனைத் | ஏலம் | 35 (469.33) | 61952 | 75000 | கடை எண். 35க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களில் **திரு.ஜுனைத்** என்பவர் ஏலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட **ரூ.75000** மாத வாடகையாக அதிகபட்ச ஏல கேள்வித் தொகை கோரியுள்ளார். |
| 8 | S.அருண்பிரசாந்த் | ஒப்பந்தப்புள்ளி | 35 (469.33) | 61952 | 62350 | |
| 9 | T.S.கார்த்திகேயன் | ஏலம் | 26 (150.98) | 19929 | 20000 | கடை எண். 26க்கு ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டதில். **திரு.T.S.கார்த்திகேயன்** என்பவர் ஏலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட **ரூ.20000** மாத வாடகையாக ஏல கேள்வித் தொகை கோரியுள்ளார். |
| 10 | K.சக்திகுமார் | ஒப்பந்தப்புள்ளி | 9 (468.34) | 61821 | 62300 | கடை எண். 09க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டதில் **திரு.சக்திகுமார்** என்பவர் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக **ரூ.62300** மாத வாடகையாக ஒப்பந்தத் தொகை கோரியுள்ளார். |
| 11 | S.கருப்பையா | ஒப்பந்தப்புள்ளி | 10 (677.37) | 89413 | 90000 | கடை எண். 10க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டதில் **திரு.கருப்பையா** என்பவர் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக **ரூ.90000** மாத வாடகையாக ஒப்பந்தத் தொகை கோரியுள்ளார். |
| 12 | V.தமிழரசன் | ஒப்பந்தப்புள்ளி | 30 (469.33) | 61952 | 62300 | கடை எண். 30க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டதில் **திரு.தமிழரசன்** என்பவர் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக **ரூ.62300** மாத வாடகையாக ஒப்பந்தத் தொகை கோரியுள்ளார். |
| 13 | R.பாண்டிச்செல்வி | ஒப்பந்தப்புள்ளி | 33 (469.84) | 62019 | 62500 | கடை எண். 33க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **திருமதி.பாண்டிச்செல்வி** என்பவர் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக **ரூ.62500** மாத வாடகையாக ஒப்பந்தத் தொகை கோரியுள்ளார். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | B.லாவண்யா | ஒப்பந்தப்புள்ளி | 36 (673.43) | 88893 | 89393 | கடை எண். 36க்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டதில் **திருமதி.லாவண்யா,** என்பவர் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட கூடுதலாக **ரூ.89393** மாத வாடகையாக ஒப்பந்தத் தொகை கோரியுள்ளார். |
| 15 | திலீப் | ஒப்பந்தப்புள்ளி | 33 (469.84) | 62019 | 20000 | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் வைப்பு தொகைக்கான வங்கி வரைவேலை இணைக்கப்படவில்லை என்பதால் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ள இயலாது |
| 16 | அபர்ணா | ஒப்பந்தப்புள்ளி | 31 (469.84) | 62019 | 20000 | |
| 17 | மஞ்சுளா தேவி | ஒப்பந்தப்புள்ளி | 10 (677.37) | 89413 | 22000 | |
| 18 | ஆசாத் | ஒப்பந்தப்புள்ளி | 30 (469.33) | 61952 | 20000 | |
| 19 | காதர் உசேன் | ஒப்பந்தப்புள்ளி | 32 (466.37) | 61561 | 16667 | |
| 20 | சித்ரா | ஒப்பந்தப்புள்ளி | 35 (469.33) | 61952 | 32000 | |
| 21 | சத்தியசீலன் | ஒப்பந்தப்புள்ளி | 9 (468.34) | 61821 | 20000 | |
| 22 | ஜெயஸ்ரீ | ஒப்பந்தப்புள்ளி | 34 (469.33) | 61952 | 21000 | |
| 23 | யோகேஸ்வரன் | ஒப்பந்தப்புள்ளி | 36 (673.43) | 88893 | 26750 | |

மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண். 1, 3, 5 மற்றும் 7 இல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களைவிட அதிகபட்ச கேள்வி தொகையாக கோரியுள்ள மாத வாடகையினை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்யவும், மேலும் வரிசை எண். 2, 4, 6 மற்றும் 8 இல் கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் குறைவான ஒப்பந்த தொகை கொடுத்துள்ளவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிப்பு செய்து செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழுங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும், இரண்டு முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருவரும் கலந்து கொள்ளாத நிலையில் மூன்றாவது முறையாக வரிசை எண். 9 முதல் 14 வரை குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு பெறப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேலும் வரிசை எண். 15 முதல் 23 வரை ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை இணைக்கப்படாததால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிப்பு செய்யவும்.

இதர கடைகளுக்கு நான்காம் அழைப்பு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண் . 1, 3, 5 மற்றும் 7 இல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களைவிட அதிகபட்ச கேள்வி தொகையாக கோரியுள்ள மாத வாடகையினை ஏற்று கடையை ஒப்படைப்பு செய்ய அனுமதி அளிக்கலாம் . மேலும் வரிசை எண் . 2, 4, 6 மற்றும் 8 இல் கண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் குறைவான ஒப்பந்த தொகை கொடுத்துள்ளவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிப்பு செய்து செலுத்திய வைப்பு த் தொகையினை திரும்ப வழுங்கவும் அனுமதி அளிக்கலாம்..
2. மேலும், இரண்டு முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருவரும் கலந்து கொள்ளலாத நிலையில் மூன்றாவது முறையாக வரிசை எண் . 9 முதல் 14 வரை குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு பெறப்பட்ட ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டு மே கலந்து கொண்டதால் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கலாம் .
3. மேலும் வரிசை எண் . 15 முதல் 23 வரை ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை இணைக்கப்படாததால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்

**1814/2025/அ1(ம4)**

**தீர்மானம் எண்: 699 பொருள்: 100 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:101

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டுக்குழு அலுவலகம் – 4க்குட்பட்ட பழைய மத்திய பேருந்து நிலையத்தில் கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 27.02.2025 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பஞ்சப்பூர் பகுதியில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் 80 சதவிகித பணிகள் முடிவுற்று திறக்கப்படவுள்ள நிலையில் பேருந்து நிலையம் மாற்றங்கள் ஏற்படும் நிலையில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளாத நிலையில் துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.384, நாள். 30.06.2025ன் படி 01.07.2025 முதல் 30.09.2025 வரை உள்ள 3 மாத காலத்திற்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டது.

| வ. எண் | குத்தகை இனம் |
|---|---|
| 1 | **மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு, மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** |
| 2 | **"ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் வைப்பு அறையில் வைக்கப்படும் பொருட்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** |
| 3 | **"ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கரவாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** |
| 4 | **ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் வெளியூர் மற்றும் உள்ளூர் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** |
| 5 | மத்திய பேருந்து நிலையத்திற்குள் உள்ள பயணியர் காத்திருக்கும் அறை (குளிரூட்டப்பட்டது) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 6 | மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள "ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் 12 தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்" |

இந்நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையம் 16.07.2025 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதால் குத்தகைதாரர்கள் குத்தகையினை ஒப்படைப்பு செய்வதாக கடிதம் கொடுத்துள்ளதாலும் , மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதாலும் , நகரப்பேருந்துகள் குறைவான எண்ணிக்கையில் வந்து செல்வதாலும் , பொதுமக்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதா லும், மேற்கண்ட 6 குத்தகை இனங்களில் வ .எண்.3 இல் கண்டுள்ள இருசக்கர வாகன நிறுத்தத் திற்கான குத்தகை இனம் தவிர இதர 5 குத்தகை இனங்களை குத்தகை இனத்தில் இருந்து நீக்கம் செய்வது குறித்து ம், மேலும், குறைவான எண்ணிக்கையில் மத்திய பேருந்து நிலையத்திற்குள் நகர ப் பேருந்துகள் வந்த செல்வதால் " **மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு பகுதியில் உள்ள கழிப்பிடத்தை புதிய இனமாக கருதியும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற தீர்மானம் எண். 564, நாள். 29.08.2025ன் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**ஏற்கனவே மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தத்திற்கு கீழ்கண்டவாறு பொறுப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.**

| வ. எண் | குத்தகை இனம் | பொறுப்பு தொகை |
|---|---|---|
| 1 | **மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு, மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.37,50,000 |
| 2 | **"ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கரவாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.30,00,000 |

இந்நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையம் 16.07.2025 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதால் குத்தகைதாரர்கள் குத்தகையினை ஒப்படைப்பு செய்வதாக கடிதம் கொடுத்துள்ளதாலும் , மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து பேருந்துகளும் புதிய பேருந் து நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதாலும் , நகரப்பேருந்துகள் குறைவான எண்ணிக்கையில் வந்து செல்வதாலும் , பொதுமக்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதாலும் , மேற்கண்ட 2 குத்தகை இனத்திற்கு பொறுப்பு தொகையினை கீழ்கண்டவாறு குறைவாக மறு நிர்ணயம் செய்து **31.03.2026 வரை உள்ள காலத்திற்கு** ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொறுப்பு தொகை |
|---|---|---|
| 1 | **பழைய மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்குப் பகுதி கட்டண கழிப்பிடம் மட்டும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.6,00,000 |
| 2 | **"ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை பழைய மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கரவாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்** | ரூ.5,00,000 |

**அலுவலக குறிப்பு**

முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையம் 16.07.2025 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாலும், மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதாலும், நகரப்பேருந்துகள் மட்டும் குறைவான எண்ணிக்கையில் வந்து செல்வதாலும், பயணிகளின் வருகை குறைந்து விட்டதாலும் பழைய மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள **கிழக்குப் பகுதி கட்டண கழிப்பிடம் மட்டும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொறுப்பு தொகையாக ரூ. 6,00,000/- மற்றும் "ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை பழைய மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கரவாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம்** வசூல் செய்யும் உரிமத்திற்கு பொறுப்பு தொகை ரூ.5,00,00/- என மறு நிர்ணயம் செய்து 31.03.2026 வரை உள்ள காலத்திற்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கலாம்

**306/2025/அ1(ம.4)**

**தீர்மானம் எண்: 700 பொருள்: 101 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:102

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – 1குட்பட்ட, மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 18.09.2025ஆம் தேதியன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் பின் வரும்மாறு.

| வ. எண் | குத்தகை இனம் விபரம் | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏல கேள்வித் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | மேலரண்சாலை பன்னடுக்கு வாகன நிறுத்தம் நான்கு சக்கர மற்றும் இரண்டு சக்கர வாகன நிறுத்தம் ஆகியவைகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1 | A.G.பிரசன்ன வெங்கடேசன் த/பெ N.கோவிந்தராஜ் 44/35c, நல்லகேணி தெரு, எடமலைபட்டி புதூர், திருச்சி-12 | - | 42,01,000 |
| | | 2 | C.அருண் பிரசாந்த் த/பெ சிவலிங்கம் 34/35, ஜடயன் பாளையம், காரமடை யூனியன், கோயம்புத்தூர் | - | 38,00,000 |

மேற்படி 18.09.2025 அன்று நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மட்டும் வரபெற்றது. ஒப்பந்தபுள்ளியில் வரபெற்ற அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை யாக திரு . A.G.பிரசன்ன வெங்கடேசன் என்பவர் ரூ.42,01,000/- கோரியுள்ளார்.

மேலும், துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளும்பொது பத்து பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கான வருடாந்திர அடிப்படை ஊதிய செலவீனம் ரூ.23,87,700 மற்றும் கட்டணம் வசூல் செய்ய ரசீது புத்தகம் அச்சடிக்கும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/- செலவாகிறது. மின் கட்டணம் ரூ .1,20,000/- வருடத்திற்கு ஆக மொத்தம் ஒரு வருடத்திற்கு உத்தேச செலவினம் ரூ.26,57,100/- மாநகராட்சிக்கு செலவாகிறது. மேற்படி மேலரண்சாலை பன்னடுக்கு வாகன நிறுத்தத்தில் கடந்த 11 மாதங்களில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு துறை மூலம் வசூல் செய்யப்பட்ட வரவினம் ரூ .4,39,460/-ஐ காட்டிலும் உத்தேச செலவினம் ரூ.26,57,700/- அதிகமாக உள்ளது.

மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் துறை வசூல் பணியை மேற்கொள்ள மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும், வருவாய் உதவியாளர்களை இப்பணியில் ஈடுபடுத்துவதினால் தினசரி வரி வசூல் பாதிப்படைகிறது . குத்தகை இனத்தில் தினசரி வசூல் செய்யப்படும்போது வசூலில் ஏற்படும் ஏற்றதாழ்வுகளை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**அலுவலக குறிப்பு**

எனவே, 18.09.2025 அன்று நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தபுள்ளி கோரலில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகைகள்

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | A.G.பிரசன்ன வெங்கடேசன் த/பெ N.கோவிந்தராஜ்<br>44/35c, நல்லகேணி தெரு,<br>எடமலைபட்டி புதூர், திருச்சி-12 | - | 42,01,000/- |
| 2 | C.அருண் பிரசாந்த் த/பெ சிவலிங்கம்<br>34/35, ஜடயன் பாளையம்,<br>காரமடை யூனியன், கோயம்புத்தூர் | - | 38,00,000/- |

மாமன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது

**அ1/ 4492 /2023/(வா.கு-1)**

**தீர்மானம் எண்: 701 பொருள்: 102 பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.42,01,000/-ஐ ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:103

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 1. வார்டு எண்.14 மற்றும் 19-க்குட்பட்ட வாணப்பட்டறை தெரு மற்றும் சிங்கார தோப்பு பகுதிகளில் பர்மா மார்க்கெட் பெட்டிகடைகள் தற்போது இயங்கிவருகின்றன.

இந்நிலையில், திருச்சிராப்பள்ளி பர்மா மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தினர் 95 எண்ணிக்கையிலான கடைகள் உள்ளதாக கடிதம் அளித்துள்ளனர், அதன்பேரில், மாநகராட்சிக்கு சொந்தமான யானைக்குளத்தில் காலியாக உள்ள இடத்தில் 95 எண்ணிக்கை கொண்ட ஒரே அளவு. 10' x 8' கடைகள் அமைப்பதற்கு வரைபடம் தயாரிக்கப்பட்டு, அதன் விவரத்தினை பர்மா மார்கெட் வியாபாரிகள் நிர்வாகிகளிடம் 04.09.2025 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன்னிலையில் மாநகராட்சி மைய அலுவலகத்தில் ஆலோசனை நடைபெற்றது.

மேலும், திருச்சிராப்பள்ளி பர்மா மார்க்கெட் வியாபாரிகள் சங்க உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கினங்க 23.09.2025 அன்று மாண்புமிகு மேயர், மாநகராட்சி ஆணையர், நகரப்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் ஆலோசனையின் படி ஒரு கடைக்கு தமிழ்நாடு பதிவுத்துறை வழிகாட்டுதல் (சிங்காரதோப்பு பகுதி) மதிப்பின் படியும் , அந்தந்த வருட பொதுப்பணி துறை வாடகை அடிப்படையில் சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 55/- (தற்போதைய வாடகை) கணக்கிடப்பட்டு ஒரு கடைக்கு 10' x 8' என்ற அளவில் 80 சதுர அடிக்கு வாடகை ரூ.4400 + GST மற்றும் கடை ஒன்றுக்கு ரூ.50,000/- முன்வைப்பு தொகை வசூல் செய்வதற்கு அரசின் உரிய அனுமதி பெற்று மேற்கொள்ள மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஒரு கடைக்கு 10' x 8' என்ற அளவில் 80 சதுர அடிக்கு ரூ .4400 + GST -யை வாடகையாக மாநகராட்சிக்கு செலுத்த அனுமதி வழங்கலாம்.
3. பயனீட்டாளர்களிடமிருந்து முன்வைப்பு தொகையாக ஒரு கடைக்கு ரூ . 50,000/- வசூல் செய்து கொள்ளவும் . பர்மா வியாபாரிகள் மூலம் கடைகளை கட்டி கொண்டு 15 வருடங்களுக்கு அனுபவித்துக் கொண்டு அதன் பிறகு மாநகராட்சி க்கு மீள வழங்க அனுமதி வழங்கலாம்.

F1/1502/2020(வ.கு.அ-I)

**தீர்மானம் எண்: 702 பொருள்: 103 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:104**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 2024 2025ம் ஆண்டுக்கான பணியாளர்கள் மற்றும் அலுவலர்களில் பணியாற்றி வருபவர்களின் விவரம் மற்றும் காலி பணியிடங்களின் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| S.No | Designation | Grade | Sanctioned Post | In position | Vacant Post |
|---|---|---|---|---|---|
| 1 | Commissioner (AD Cadre) | A | 1 | 1 | 0 |
| 2 | Deputy Commissioner (JD Cadre) | A | 2 | 1 | 1 |
| 3 | AC (Zone) | B | 5 | 4 | 1 |
| 4 | AC (Revenue) | B | 1 | 1 | 0 |
| 5 | AC (Personnel) | B | 1 | 1 | 0 |
| 6 | AC (Accounts) | B | 1 | 0 | 1 |
| 7 | City Health Officer | A | 1 | 1 | 0 |
| 8 | Assistant City Health Officer | B | 1 | 0 | 1 |
| 9 | City Engineer | A | 1 | 0 | 1 |
| 10 | Deputy City Engineer | B | 3 | 0 | 3 |
| 11 | Zonal Engineer | A | 5 | 2 | 3 |
| 12 | City Planner | A | 1 | 1 | 0 |
| 13 | Accounts Officer | B | 1 | 1 | 0 |
| 14 | Council Secretary | B | 1 | 0 | 1 |
| 15 | Public Relation Officer | B | 1 | 0 | 1 |
| 16 | Administrative Officer | B | 5 | 5 | 0 |
| 17 | Revenue Officer | B | 1 | 1 | 0 |
| 18 | Vetinary Medical Officer | B | 1 | 0 | 1 |
| 19 | Assistant Executive Engineer | B | 5 | 3 | 2 |
| 20 | Assistant Engineer / Junior Engineer | B | 25 | 16 | 9 |
| 21 | Junior Engineer (Automobile) | B | 1 | 0 | 1 |
| 22 | Assistant City Planner | B | 10 | 1 | 9 |
| 23 | Planning Inspector | B | 10 | 0 | 10 |
| 24 | Superintendent | B | 16 | 15 | 1 |
| 25 | Assistant Revenue Officer | B | 5 | 2 | 3 |
| 26 | Assistant | C | 23 | 23 | 0 |
| 27 | Personal Clerk | C | 3 | 0 | 3 |
| 28 | Junior Assistant | C | 46 | 36 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | Driver | C | 3 | 3 | 0 |
| 30 | Sanitary Officer | C | 5 | 5 | 0 |
| 31 | Sanitary Inspector | C | 25 | 8 | 17 |
| 32 | Entomologist | C | 1 | 0 | 1 |
| 33 | Draughtsman | C | 8 | 1 | 7 |
| 34 | Technical Assistant / Public Works Overseer | C | 50 | 14 | 36 |
| 35 | Electrical Superintendent | C | 1 | 0 | 1 |
| **Total** | | | **270** | **146** | **124** |

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**சி1 / 12378 / 2025 (மை)**

**தீர்மானம் எண்: 703 பொருள்: 104 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

## பொருள்:105

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்க்காணும் பணி திரு.டி.ராமநாதன், திருச்சி ஒப்பந்ததாரால் செய்து முடிக்கப்பெற்று, பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட பணிக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லை.

மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொகையின் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள். | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பழைய வார்டு எண்.07க்குட்பட்ட அரியமங்கலம் கிராமம் அமைந்துள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை மராமத்து பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ.2.75 இலட்சம் | ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.332/2017-2018, வ.எண்.2 நாள்.07.03.2018 | EMD 2% NSC ரூ.6000/- | - |
| | | | 21.11.2019 | 10,844 |
| | **மொத்தம்** | | | **10,844** |

மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.டி.ராமநாதன், திருச்சி அவர்களுக்கு மேற்கண்ட பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்பு தொகை ரூ.10,844/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.டி.ராமநாதன், திருச்சி அவர்களுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்பு தொகை ரூ.10,844/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 /429/ 2018 (மையம்)**

**தீர்மானம் எண்: 704 பொருள்: 105 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:106

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு, இறுதி பட்டியல் தொகை பெறப்பட்டு விட்டதாகவும், இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 5 சதவீத காப்புத் தொகையில் 2.5 சதவீத காப்புத் தொகை பெறப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 2.5 சதவீத தொகை, ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு, மேற்படி பணியின் ஒப்பந்தக்காரர் M/s. சாமி டெவலப்பர்ஸ், திருச்சிராப்பள்ளி, நிறுவனத்தாரின் 09.06.2025ம் தேதிய மனுவின் வாயிலாக கோரப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை , கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள மீதமுள்ள காப்புத் (2.5%) தொகைகள் காலங்கடந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், புதிய வார்டு எண்.27 (பழைய வார்டு எண் .51) க்குட்பட்ட விருப்பாச்சிபுரம் வாய்க்கால் (மூலக்கொள்ளைத் தெரு முதல் கீழச்சத்திரம் ரோடு வரை ) மேம்படுத்தும் பணி மற்றும் சீர்மிகு வாய்க்கால் அமைக்கும் பணி. மதிப்பீட்டுத் தொகை ரூ.93.00 லட்சம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ( DD No.727442, Dated.29.01.2020) | 93000 |
| | | கூடுதல் முன்வைப்புத் தொகை ( Indian Bank DD No.727944, Dated.21.04.2020) | 93000 |
| | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.09.10.2020 (2.5%) | 111522 |
| | | இரண்டாவது மற்றும் இறுதி பட்டியல் நாள்.31.12.2020 (2.5%) | 112463 |
| | | **மொத்தம்** | **409985** |

மேற்கண்ட திட்டப்பணிக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகைகள், ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகைகள் மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகைளை சேர்த்து மொத்தம் ரூ.4,09,985/–காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் இருப்பதால், இத்தொகையினை திரும்ப வழங்குவதற்கு மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.4,09,985/–ஐ M/s. சாமி டெவலப்பர்ஸ், திருச்சிராப்பள்ளி, ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1(மை)/7880/2020**

**தீர்மானம் எண்: 705 பொருள்: 106 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:107

மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று மூன்றாண்டுகளுக்கு மேல் ஆவதால் , இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை , ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் M/s. SR Construction, நாமக்கல் நிறுவனத்தார் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை , கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் , மண்டலம் எண்.5 பழைய வார்டு எண் .56 புதிய வார்டு எண்.22க்குட்பட்ட தில்லை நகர் வணிக வளாகத்தில் சாய்வு தளம் அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.95.00 லட்சம். | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை (Federal Bank வரைவோலை எண். 913653 நாள்.27.10.2020) | 95000 |
| 2. | | கூடுதல் முன்வைப்புத் தொகை (Federal Bank வரைவோலை எண்.913782 நாள்.01.12.2020) | 95000 |
| 3. | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.07.05.2021(2.5%) | 134384 |
| 4. | | இரண்டாவது மற்றும் இறுதிப் பட்டியல் நாள்.06.10.2021(2.5%) | 102244 |
| **மொத்தம்** | | | **426628** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.4,26,628/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து M/s. SR Construction, நாமக்கல், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ .4,26,628/-ஐ M/s. SR Construction, நாமக்கல், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/7606/2020(மை)**

**தீர்மானம் எண்: 706 பொருள்: 107 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:108**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று நான்காண்டுகளுக்கு மேல் ஆவதால், இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 5 சதவீத காப்புத் தொகையில், மீதமுள்ள 2.5 சதவீத காப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத்தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் திரு. ஜி.ஜி. சக்திவேல், என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் (2.5%) தொகைகள் காலங்கடந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், வார்டு எண்.12&13 (பழைய வார்டு எண்.9&10) க்குட்பட்ட பகுதியில் (தூய வளனார் மேல்நிலைப்பள்ளி முதல் வி.என் நகர் வரை) சீர்மிகு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.91.00 லட்சம். | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை Canara Bank DD No.978277 Date.29.10.2020 | **91000** |
| 2. | | கூடுதல் முன்வைப்புத் தொகை Canara Bank DD No.978315 Date.02.01.2021. | **91000** |
| 3. | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.10.05.2021 (2.5%) | **101625** |
| 4. | | இரண்டாவது மற்றும் இறுதி பட்டியல் நாள்.13.09.2021 (2.5%) | **116400** |
| **மொத்தம்** | | | **400025** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகைகளை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரு. ஜி.ஜி. சக்திவேல், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.4,00,025/-ஐ திரு. ஜி.ஜி. சக்திவேல், திருச்சிராப்பள்ளி ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/8103/2020(மை)**

**தீர்மானம் எண்: 707 பொருள்: 108 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:109

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று இரண்டாண்டுகளுக்கு மேல் ஆவதால், இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 5 சதவீத காப்புத் தொகையில், மீதமுள்ள 2.5 சதவீத காப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத்தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் திரு. பி. வேலுசாமி, திருச்சிராப்பள்ளி என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் (2.5%) தொகைகள் காலங்கடந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், பஞ்சப்பூர் பகுதியில் சூரியஒளி மின் நிலையத்திற்கு தேவையான வளர்ச்சி பணிகள்.<br>மதிப்பீடு ரூ.93.00 லட்சம். | **ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வரைவோலை எண்.785216 Date.18.01.2021** | **94000** |
| 2. | | **கூடுதல் முன்வைப்புத் தொகை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வரைவோலை எண்.892573 Date.27.01.2021** | **93000** |
| 3. | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.12.07.2021 (2.5%) | **124527** |
| **மொத்தம்** | | | **311527** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகைகளை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரு. பி. வேலுசாமி, திருச்சிராப்பள்ளி, ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.3,11,527/-ஐ திரு. பி. வேலுசாமி, திருச்சிராப்பள்ளி, ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/1691/2021(மை)**

**தீர்மானம் எண்: 708 பொருள்: 109 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:110

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணி முடிக்கப்பட்டு இறுதி பட்டியல் தொகை பெற்று நான்காண்டுகளுக்கு மேல் ஆவதால், இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 5 சதவீத காப்புத் தொகையில், மீதமுள்ள 2.5 சதவீத காப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத்தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி திட்டப்பணியின் ஒப்பந்தக்காரர் திரு. எஸ். துளசிதாஸ், என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் (2.5%) தொகைகள் காலங்கடந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு Defects Liability period முடிவடைந்து விட்டது மற்றும் தணிக்கை தடைகள் நிலுவை ஏதுமில்லை.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை, கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ், வார்டு எண்.13 (பழைய வார்டு எண்.10)க்குட்பட்ட பகுதியில் (தூய வளனார் கல்லூரி நுழைவு வாயில் முதல் தூய வளனார் மேல்நிலைப்பள்ளி நுழைவு வாயில் வரை) சீர்மிகு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.91.00 லட்சம். | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை Indian Overseas Bank DD No.384432 Date.31.10.2020 | **91000** |
| 2. | | கூடுதல் முன்வைப்புத் தொகை Indian Overseas Bank DD No.384431 Date.31.10.2020. | **91000** |
| 3. | | முதலாவது மற்றும் பகுதிப் பட்டியல் நாள்.30.04.2021 (2.5%) | **57122** |
| 4. | | இரண்டாவது மற்றும் இறுதி பட்டியல் நாள்.13.09.2021 (2.5%) | **161150** |
| **மொத்தம்** | | | **400272** |

எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள தொகைகளை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரு. எஸ். துளசிதாஸ், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.4,00,272/-ஐ திரு. எஸ். துளசிதாஸ், திருச்சிராப்பள்ளி ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ1/8107/2020(மை)**

**தீர்மானம் எண்: 709 பொருள்: 110 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## நிகழ்ச்சி நிரல்

### துணை அறிவிப்பு

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொது நிதி 2025–26ன் கீழ், அட்டவணையில் வ.எண்.1ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு ஆணையர் அவர்களின் 28.05.2025ம் தேதிய தீர்மானம், வ.எண்.2ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண்.50, நாள்.19.08.2025 மற்றும் வ.எண்.3ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு பணிக்குழு தீர்மானம் எண்.68, நாள்.26.08.2025ல் நிர்வாக அனுமதிகள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 190/2025–26ன் வாயிலாக 19.09.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு குழு அலுவலகம் – I, வார்டு எண்.12க்குட்பட்ட கோட்டை ஸ்டேசன் சாலை முதல் சுப்ரமணியசாமி கோவில் வரை செல்லும் கோட்டை வாய்க்கால், கீழசிந்தாமணி மற்றும் வி.என். நகர் பகுதிகளில் செல்லும் வாய்க்கால், வார்டு எண்.13க்குட்பட்ட வடக்கு ஆண்டார் தெரு, பட்டர்வொர்த் சாலை மற்றும் வென்னிஸ் தெரு ஆகிய பகுதிகளில் செல்லும் மழைநீர் வடிகால் ஆகியவற்றில் தூர்வாரும்பணியினை மேற்கொள்ளுதல்.<br>**மதிப்பீடு ரூ. 10.65 இலட்சம்.**<br>இ8 / 10717 / 2025(மையம்) | 1. M/s. Alphaa Minds Ventures, திருச்சி. 0.20% குறைவு.<br>2. திரு.S.சிவசங்கரராஜவேலு, திருச்சி. 1.98% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. Alphaa Minds Ventures,ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை காட்டிலும் 0.20 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு குழு அலுவலகம் – I, வார்டு எண்.13க்குட்பட்ட அண்ணா சிலை முதல் பெரியசாமி டவர் முடிய உள்ள சிந்தாமணி பஜார் பிரதான சாலை மழைநீர் வடிகாலில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல்.<br>**மதிப்பீடு ரூ. 16.70 இலட்சம்.**<br>இ8 / 10722 / 2025(மையம்) | 1. திரு.K. ஜெயராமன், திருச்சி. 0.06% குறைவு.<br>2. திரு,P.பிரபாகரன், திருச்சி. 1.16% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.K. ஜெயராமன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு குழு – I, வார்டு எண்.15க்குட்பட்ட பூசாரித் தெருவில் உள்ள தூய்மைப் பணியாளர்கள் குடியிருப்பில் மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 17.10 இலட்சம்.** இ8 / 7696 / 2025(மையம்) | ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |

**அலுவலகக்குறிப்பு** :

3) அட்டவணையில் வ .எண்.1ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு ஆணையர் அவர்களின் 28.05.2025ம் தேதிய தீர்மானம் , வ.எண்.2ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் தீர்மானம் எண்.50, நாள்.19.08.2025 மற்றும் வ .எண்.3ல் கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு பணிக்குழு தீர்மானம் எண்.68, நாள்.26.08.2025ல் நிர்வாக அனுமதிகள் அளிக்கப்பட்டதைத் மாம ன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

4) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் 4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ8 / 6457 / 2025 (மையம்)**

**தீர்மானம் எண்: 710 பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொது நிதி 2025-26ன் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு பணிக்குழு தீர்மானம் எண்கள்.69 மற்றும் 74, நாள்.26.08.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 191/2025-26ன் வாயிலாக 19.09.2025 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிக் கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.1,2 மற்றும் 3க்குட்பட்ட பகுதிகளில் செல்லும் சம்பா வாய்க்கால் மற்றும் நாட்டு வாய்க்கால் ஆகியவற்றில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 7.25 இலட்சம். 10714/2025/இ8(மையம்)** | 1. M/s. AA Infra, திருச்சி. 0.06% குறைவு.<br>2. திரு.M.பாபுராஜ், திருச்சி. 1.93% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s.AA Infra, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.4 மற்றும் 5க்குட்பட்ட நெல்சன் சாலை முதல் சென்னை தேசிய நெடுஞ்சாலை கொள்ளிடம் கரை முடிய உள்ள பகுதிகளில் செல்லும் சம்பா வாய்க்காலில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 8.90 இலட்சம். 10715/2025/இ8(மையம்)** | 1. M/s. AA Infra, திருச்சி. 0.07% குறைவு.<br>2. திரு.M.பாபுராஜ், திருச்சி. 0.86% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. AA Infra, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.5, 6 மற்றும் 7க்குட்பட்ட சென்னை டிரங்க் சாலை முதல் சென்னை தேசிய நெடுஞ்சாலை வரை உள்ள பகுதிகளில் செல்லும் நாட்டு வாய்க்காலில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 6.30 இலட்சம். 10716/2025/இ8(மையம்)** | 1. திரு.C. சுப்ரமணியன், திருச்சி. 0.05% குறைவு.<br>2. திரு.M. பாபுராஜ், திருச்சி. 0.34% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.C.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண்.15க்குட்பட்ட மதுரா கார்டன், எஸ்.எஸ். நகர், ராஜிவ் காந்தி நகர், லயன் டேட்ஸ் மற்றும் பூசாரித் தெரு ஆகிய பகுதிகளில் செல்லும் வாய்க்கால்களில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 6.15 இலட்சம். 10718/2025/இ8(மையம்)** | 1. திரு, P.பிரபாகரன், திருச்சி. 0.06% குறைவு.<br>2. திரு. M. வடிவேல், திருச்சி. 3.96% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு, P.பிரபாகரன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 5 | வார்டு எண்.15க்குட்பட்ட பாரதியார் தெரு முதல் சஞ்சீவி நகர் வரை உள்ள பகுதிகள் மற்றும் ஜான் தோப்பு முதல் மூவேந்தர் நகர் வரை உள்ள பகுதிகள் ஆகியவற்றில் செல்லும் இரட்டை வாய்க்காலில் தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 9.10 இலட்சம். 10719/2025/இ8(மையம்)** | 1. திரு. S. பெரியசாமி, திருச்சி. 0.11% குறைவு.<br>2. திரு.G.G சக்திவேல், திருச்சி. 1.52% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.S. பெரியசாமி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.11 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 6 | வார்டு எண்.21க்குட்பட்ட தென்னூர் சாலை முதல் போர்ட் ஸ்டேஷன் சாலை வரை உள்ள பகுதிகளில் செல்லும் கோட்டை வாய்க்கால், நத்தர்ஷா பள்ளிவாசல் பின்பகுதி மற்றும் மதுரை சாலை பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ. 7.25 இலட்சம். 10721/2025/இ8(மையம்)** | 1. M/s. NS Infra Enterprises, திருச்சி. 0.05% குறைவு.<br>2. M/s. Nachiyar Construction, திருச்சி. 0.47% கூடுதல். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. NS Infra Enterprises, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
